வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

01.01.2021 வெள்ளிக்கிழமை

MARUTHI MONEY EXCHANGE

மாருதி
Money Exchange
WESTERN UNION MONEY TRANSFER
Ria
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0212214433, 0762844443
Head Office
285,Galle Road, Wellawatte, Colombo-06. T.P:0112362086

# மாகாணசபை முறையை நானும் ஏற்கவேயில்லை!

## தமிழ் மக்களுக்கு அதனால் எதுவுமில்லை என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



கொழும்பு, ஜனவரி 01

“தமிழ் மக்கள் எதிர்பார்த்த உரிமைகள் எதுவும் மாகாண சபை முறைமை ஊடாகக் கிடைக்கவில்லை. இதனால், நானும் மாகாண சபை முறைமையை எதிர்க்கிறேன்.” -இவ்வாறு தெரிவித்திருக கிறார் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம். 02

2021

வாசகர்கள், அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும்

**இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

# தீவிரவாதிகளின் தோள்களை பற்றி ஆட்சிக்கு வர எதிர்க்கட்சி முயற்சி

## இராஜாங்க அமைச்சர் பியல் நிஸாந்த சஜித் தரப்பு மீது கடும் குற்றச்சாட்டு

பேருவளை, ஜன.01

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் இனவாதம், மதவாதம் பேசி மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபடும் அதேவேளை தீவிரவாதிகளின் தோள்களைப் பற்றி மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றனர் என இராஜாங்க அமைச்சர் பியல் நிஸாந்த பகிரங்கமாகக் குற்றம்சாட்டியுள்ளார். 02

# கொரோனாவால் ஐவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 01

கொரோனா தொற்றால் நேற்று ஐந்து பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்தது.

ஹோமகமவை சேர்ந்த 59 வயதான ஆண், பெல்மடுல் லவை சேர்ந்த 02

# வடக்கு மாகாணத்தில் சந்தைகளை உடன் திறப்பது சாத்தியமில்லை!

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.01

மருதனார்மடம் சந்தையை மீளத் திறக்குமாறு சில கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. நேற்றுமுன் தினமும் மருதனார் மடம் சந்தையுடன் தொடர்புடைய 12 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த நிலையில் சந்தைகளை மீள திறப்பது ஆபத்தானது. தொற்று பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் தான் மருதனார் மடம் சந்தை மற்றும் ஏனைய சந்தைகளை மீள திறக்க ஆலோசனை வழங்குவோம் என தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் 02

# மருதனார்மடம் கொத்தணி: தொற்று எண்ணிக்கை 131

யாழ்ப்பாணம், ஜன. 01

உடுவிலை சேர்ந்த 39 வயதான பெண் ஒருவருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது என்று யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ். போதனா வைத்திய சாலை, யாழ். பல்கலைக் கழக ஆய்வுகூடங்களில் 02

இன்று முதல் 16 பக்கங்களுடன் ஈழநாடு அதே விலையில்

# சுமந்திரனுக்கு புத்தாண்டில் பதிலளிக்க விரும்பவில்லை!

## மாவை சேனாதிராசா மறைமுகப் பேச்சு

யாழ்ப்பாணம், ஜன. 01

“நான் தன்னிச்சையான முடிவு எதனையும் எடுக்கவில்லை. எனவே, பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனின் கூற்றை நான் நிராகரிக்கின்றேன். அவருக்கான பதிலை புத்தாண்டில் வழங்க விரும்பவில்லை. இரண்டாம் திகதியின் பின் கொடுக்கிறேன்.”, இவ்வாறு பொடி வைத்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா 02



“டான் தொலைக்காட்சியின் 2020 சாதனைத் தமிழன்” விருது பேராசிரியர் சி.மௌனகுருவுக்கு வழங்கப்பட்டது. தொலைக்காட்சியின் கலையகத்தில் சுகாதார விதிகளை அனுசரித்து நடந்த விருது வழங்கும் நிகழ்வில் விருந் தினர்களாகக் கலந்துகொண்ட யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அ. பிறேம் சங்கர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் ஆகியோர் வழங்கிக் கௌர வித்தனர். இதன் போது, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபரும் விரிவுரையாளருமான ச. லலீசன், டான் குழுமத் தலைவர் சு.குகநாதன் ஆகியோரும் உடனிருந்தனர்.

# தீர்வை வென்றெடுக்க ஓரணியில் திரள்வோம்

## புத்தாண்டில் சம்பந்தன் அழைப்பு



கொழும்பு, ஜன 01

”இலங்கையின் தேசிய பிரச்னைக்கு புதிய அரசமைப்பின் ஊடாகத் தீர்வை வென்றெடுக்க அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார்.

அதில் அவர் மேலும் 02

## அரசியல் கைதிகள் விடுதலை:

# கருணை மனுவுக்கு ஆதரவு கேட்டு சர்வமத தலைவர்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 01

தமிழ் அரசியல் கைதிகளை கருணை அடிப்படையில் விடுவிக்குமாறு கோரும் கருணை மனுவுக்கு ஆதரவு கேட்டு யாழ். மாவட்டத்திலுள்ள சர்வமத தலைவர்களுடன் அரசியல் கைதிகளின் உறவுகள் நேற்று சந்தித்தனர்.

“ஒன்றுபட்டு தமிழ் அரசியல் கைதிகளை சிறைமீட்க வலியுறுத்தி அரசியல் தரப்பினரையும், ஆன்மீகத் தரப்பினரையும் 02

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## மாகாணசபை...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனினும் பௌத்த பிக்குகள் மாகாண சபை முறைமைக்கு எதிராகக் கொண்டுள்ள நிலைப்பாட்டுக்கும் எனது நிலைப்பாட்டுக்கும் முற்றிலும் வேறுபாடு உள்ளது.

மாகாண சபை முறைமையில் ஆரம்பத்தில் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறவில்லை. மாகாண சபை முறைமைக்கு அப்பால் சென்ற அதிகார பரவலாக்கலை கொண்ட வேலைத்திட்டத்திற்கு செல்ல வேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

இதனால், மாகாண சபைக்கு அப்பால் செல்ல வேண்டுமே அன்றி மாகாண சபை முறைமையை ஒழிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமான நாடு கிடையாது. அனைத்து இன மக்களுக்கும் சொந்தமான நாடு. சில இனவாத பௌத்த பிக்குகள் இதனை புரிந்துகொள்ளாது செயற்பட்டு வருவது குறித்து வருத்தப்படுகிறேன்.

இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் என அனைத்து இன மக்களுக்கும் சம உரிமையுள்ள நாடு. சிங்களவர்களை தவிர ஏனைய இன மக்களை சமமான நிலையில் கருத முடியவில்லை என்றால், இந்த நாட்டை இனவாத நாடு என்று அடையாளப்படுத்த முடியும்-என்றார். (அ)

## வடக்கு...

பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன். நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று முன் தினம் வடமாகாணத்தில் 676 பேருக்கு பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில்13 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தில் 12 பேரும், முல்லைத்தீவில் ஒருவரும் தொற்றிற்குள்ளாகினர்.

யாழ்ப்பாணத்தில் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து 8 பேரும், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து 3 பேரும், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து ஒருவரும் அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் அனைவரும் மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள். ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்து 2 வாரங்கள் தனிமைப்படுத்தப்பட்டு, தனிமைப்படுத்தல் முடியும் போது பி.சி.ஆர். பரிசோதனைக்குள்ளாக்கியதில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களையும் சேர்த்து மருதனார்மட கொத்தணியில் 130 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து 57 பேர், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து 34 பேர், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து 21 பேர், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து 8 பேர், சங்கானை, கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து தலா 4 பேர், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து தலா ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து ஒருவர் அடையாளம் காணப்பட்டார். ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மரக்கறி வியாபாரியின் மனைவியே அவர். அங்கு இரண்டாவது தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் டிசெம்பர் மாதத்தில் நேற்று முன் தினம் வரை 152 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதில் யாழ்.மாவட்டத்திலிருந்து 134 பேர், வவுனியா மாவட்டத்திலிருந்து 10 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் 5 பேர், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 2 பேர், மன்னார் மாவட்டத்திலிருந்து ஒருவர் அடையாளம் காணப்பட்டனர்.

மருதனார் மடம் சந்தையை மீள திறக்குமாறு சில கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. நேற்றும் மருதனார்மட சந்தையுடன் தொடர்புடைய 12 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த நிலையில் சந்தைகளை மீள திறப்பது ஆபத்தானது. தொற்று பரவல் கட்டுப்பாட்டிற்குள் வந்த பின்னர்தான் மருதனார்மடம் சந்தை மற்றும் ஏனைய சந்தைகளை மீள திறக்க ஆலோசனை வழங்குவோம்-என்றார்.

## கொரோனாவால்...

75 வயதான ஆண் மற்றும் 65 வயதான பெண்ணு மாக கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த மூவர் உயிரிழந்தனர்.

இதேபோன்று மாத்தளை மாவட்டம் கலேவல பிரதே சத்தை சேர்ந்த 46 வயதான ஆண் ஒருவரும், களுத்துறை மாவட்டத்தின் தர்கா நகரைச் சேர்ந்த 72 வயதான ஆண் ஒருவரும் உயிரிழந்தனர்.

இந்த ஐவரின் மரணத்தை அடுத்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 204 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## மருதனார்மடம்...

607 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரி சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதிலேயே உடுவிலை சேர்ந்த பெண் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனால், மருதனார்மடம் கொத்தணியில் தொற்றுக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை 131ஆக அதிகரித்துள்ளது. (ஐ - 3)

## தீவிரவாதிகளின்...

கொரோனா வைரஸ் தொற்றுத் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவதை அடிப்படையாகக் கொண்டு சிங்களம் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் பிரச்னைகள் ஏற்படும் வகையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

பேருவளையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் முன்னெடுக்கும் செயல்பாடுகளுக்கு நாட்டு மக்கள் என்ற ரீதியில் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மாறாக அவற்றுக்கு ஒத்துழைக்காமல் அதில் அரசியல் இலாபம் தேடுவது முறையற்றதாகும்.

இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் மாவனெல்ல பகுதியில் புத்தர்சிலைகள் மீது மீண்டும் கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறான செயல்பாடுகள் வன்மையாகக் கண்டிக்கத்தவை.

எனவே இவ்வாறான செயல்பாடுகளை பிரிவினைவாதிகள் உடனடியாக நிறுத்த வேண்டும். இந்தச் செயல்பாடுகளுக்கு ஆதரவு வழங்குபவர்கள் பாரபட்சமின்றித் தண்டிக்கப்படுவார்கள்.

அத்துடன் ஜனாதிபதியும் அரசாங்கமும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் போன்ற மிலேச்சத்தனமான தாக்குதல்கள் மீண்டும் எமது நாட்டில் ஏற்பட இடமளிக்கமாட்டார்கள்.

மக்களால் ஒதுக்கப்பட்ட எதிர்க்கட்சியினர், தீவிரவாதிகளின் தோள்களைப் பற்றி மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றனர்.

புதிய அரசாங்கம் ஆட்சியமைத்ததால் நாட்டிலுள்ள ஒட்டுமொத்த மக்களும் பயம், சந்தேகமின்றி பாதுகாப்புடன் வாழ்வதுடன், சகலரும் சகோதரத்துடன் வாழக்கூடிய சூழலை கட்டியெழுப்ப ஜனாதிபதி மற்றும் அரசாங்கமும் முன்னெடுக்கக் கூடிய சகல நடவடிக்கைகளையும் பாதுகாப்புப் பிரிவினருடன் இணைந்து முன்னெடுத்து வரும் நிலையில், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் இனவாதம், மதவாதம் பேசி மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர்- என்றார். (அ-எ)

# பொலிஸ் உத்தியோகத்தர் மீது ஆயுதத்தால் தாக்கியவர் கைது

மஹவ பகுதியில் இரவு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கியமை தொடர்பில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டதுடன், மேலும் இரு சந்தேக நபர்கள் தேடப்படுகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மஹவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரில் ஒருவரை சந்தேக நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

இதன்போது, படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் மஹவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நிக்கவெரட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு சத்திர சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது என வைத்தியசாலை நிர்வாகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரவு நேரக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் சந்தேகத்துக்கு இடமான முறையில் சிலர் நடமாடிக்கொண்டிருப்பதை அவதானித்துள்ளனர்.

அவர்களிடம் விசாரணை செய்தபோது, சந்தேக நபர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகளுக்கமைய கூரிய ஆயுதத்தால் தாக்கிய சந்தேகநபரும் அவருடன் இருந்த இன்னுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இருவரை கைது செய்ய பொலிஸார் தொடர்ந்தும் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். - என்றார். (எ)

## சுமந்திரனுக்கு...

தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். மாநகர சபையின் முதல்வராக மீண்டும் இமானுவல் ஆனல்ட்டையே சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் விரும்பினர். அதுமட்டுமன்றி கூட்டமைப்பு கட்சித் தலைவர்களுடன் பேசியே முடிவுகள் எடுக்கப்பட்டன.

எனவே, சுமந்திரனின் கூற்றை நான் நிராகரிக்கிறேன். அவர் பாராளுமன்றத் தேர்தல் முடிந்த பின்னரும் கட்சித் தலைவர், பொதுச் செயலாளர் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். அது போன்றுதான் தற்போதும் முன்வைத்துள்ளார். அவருக்குப் பதில் இப்போது கூறவில்லை. புத்தாண்டு தினத்தில் அவ்வாறு செய்தி வருவதில் நான் உடன்படவில்லை. இரண்டாம் திகதிக்குப் பின்னர் பதில் வழங்குவேன். உரிய முறைப்படி கட்சி செயல்குழுவைக் கூட்டி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ஐ-எ)

## தீர்வை...

குறிப்பிட்டுள்ளதாவது: -

மலர்ந்துள்ள 2021ஆம் ஆண்டானது நாட்டு மக்களுக்குச் செழிப்பானதும் மகிழ்ச்சிகரமானதுமான ஆண்டாக அமைய வேண்டும்.

இவ்வருடமானது எமது மக்களுக்கு நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கொண்டு வருகின்ற ஆண்டாகத் திகழ வேண்டும்.

இந்தப் புதிய ஆண்டிலாவது எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட வேண்டும். அதில் முன்வைக்கப்படும் தீர்வானது நீதி மற்றும் சமத்துவம் என்பவற்றின் அடிப்படையில் ஒருமித்த நாட்டுக்குள் பிரிக்கப்பட முடியாததாக இருப்பதை உறுதி செய்யும் வகையில் அமையவேண்டும். அதேவேளை, மாகாணங்களுக்கு நேர்மையான ஓர் அதிகாரப் பகிர்வையும் கொண்டிருக்க வேண்டும். இதுவே எமது நிலைப்பாடு. எமது இந்தப் பரிந்துரைகளை புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர்கள் குழுவிடம் சமர்ப்பித்துள்ளோம்.

நாட்டைப் பிளவுபடுத்துவது எமது நோக்கமல்ல. பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள்ளேயே நாம் தீர்வைக் கேட்கின்றோம். எமது எதிர்கால சந்ததியினருக்கு வளம்மிக்கதும், நீதியையும், நேர்மையையும் நிலைநாட்டும் ஓர் இலங்கைத் தீவை உருவாக்குவதே எமது கடமையாகும்.

எனவே, இந்தப் புத்தாண்டு நாளில் இந்தத் தலையாய கருமத்தை நிறைவேற்ற இன, மத, கட்சி வேறுபாடின்றி உழைக்க முன்வருமாறு அரசியல் தலைவர்கள், சமய தலைவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்- என்றுள்ளது. (அ)

## கருணை...

தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் அண்மை நாட்களாக சந்தித்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே நேற்றைய சந்திப்பும் இடம்பெற்றது.

சிறைகளில் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டும், உடல், உள அளவிலும் பெரும் பாதிப்புக்களை சந்தித்துள்ள தமிழ் அரசியல் கைதிகளை தற்போது கொரோனா தொற்று நோயும் தாக்கியுள்ளது.

தற்போது நிலவும் சூழ்நிலையில் கைதிகளை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யும் அரசு தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று கோரி குரலற்றவர்களின் குரல் அமைப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக அரசியல் கைதிகளின் விடுதலை செய்யக் கோரி அரசாங்கத்திற்கு கருணை மனு ஒன்றை அளிக்க அந்த அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. இதற்காக நேற்றைய தினம் அவர்கள் யாழ். நாக விகாரையின் விகாராதிபதி வண. விமல தேரர், மானிப்பாய் யாத்திர ஸ்தல பங்குத்தந்தை அருட்பணி வண. டெக்ஸ் சவுந்திரா அடிகளார், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்ட தலைவர் மௌலவி என்.எம். இர்பான், செயலாளர் மௌலவி ஏ.எம். றஹீம் ஆகியோரை நேரில் சந்தித்து ஆதரவு பெற்றனர். (ஐ-3)

## இனி ஒரு விதி....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது. 2016ஆம் ஆண்டு வடக்கு -கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பு கொண்டிருந்த பலமான நிலை இன்று காணப்படவில்லை. கடந்த பாராளு மன்றத் தேர்தலையடுத்து பல புதிய முகங்கள் தமிழ் அரசியல் தரப்பில் வெளிப்பட்டுள்ளன.

இந்நிலையில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக பல புதிய அணுகுமுறைகளை தமிழ் அரசியல் தரப்பு கொண்டிருக்கவேண்டிய அவசியமானதா கின்றது. இதுவிடயத்தில் வடக்கு-கிழக்கு அரசியலாளர்கள் மத்தியில் ஓர் ஒத்திசைவான போக்கு காணப்படா விடில், அரசியல் மற்றும் மனிதாபிமானப் பிரச்னைகள் சார்ந்த விடயங்களில் பின்னடைவுகளே ஒரு தொடர் கதையாக அமையும்.

ஆகவே, வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் தரப்பினர் இனியொரு விதிசெய்து, புதிய சவால்களை ஒத்திசைவாக எதிர்கொள்வதே ஆக்கபூர்வமான பலன்களை தருவதாக இருக்கும்.

Eelanadu ஈழநாடு
01.01.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, மார்கழி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

## 2021 - சவால்கள்!

2020 – கழிந்தது. கொரோனா அச்சம், ராஜபக்ஷக்களின் மீளெ முச்சி, இலங்கையின் பாரம்பரிய அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் மோசமான பின்னடைவு. அரசியலில் நரியென்று வர்ணிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் அவமானகரமான தோல்வி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பின்னடைவு, இலங்கை தமிழரசு கட்சிக்குள் பிளவு, கூட்டமைப்பிற்கு மாற்றான அணியைச் சேர்ந்தவர்களின் பாரளுமன்ற பிரவேசம் – என பல மாற்றங்களுடன் 2020 கழிகின்றது. இனி 2021.

நாடு கடுமையான பொருளாதார நெருக்கடிகளை இந்த ஆண்டில் எதிர்கொள்ள நேரிடலாம் என்னும் கணிப்பு பொதுவாகவே உண்டு. இதனை சமாளிப்பதற்கு இலங்கை மேலும் சீனாவிடம் செல்லப் போகின்றதா அல்லது மேற்குலகுடன் இணங்கிச் செல்லப்போகின்றதா என்பது தான், 2021இன் முக்கிய அரசியல் விவகாரமாக மேலெழும். சீனாவுடன் செல்ல முயன்றால், நாடு மேலும் சீனாவின் பிடிக்குள் விழவே நேரிடும். சீனாவின் பிடிக்குள் மேலும் விழநேரிட்டால், காலப்போக்கில் சீனாவின் காலனியாகவே இலங்கையின் தென்பகுதி மாறிவிடக் கூடும். இதன் தொடர்ச்சியாக, வடக்கு கிழக்கிலும் சீனாவின் பாதங்கள் பட வாய்ப்புண்டு.

இதற்கு மாறாக, ராஜபக்ஷக்களின் அரசாங்கம், மேற்குலகுடன் – முக்கியமாக, அமெரிக்காவுடன் இணங்கிச் செல்லும் முடிவையெடுத்தால், மேற்குலகின் மனித உரிமைகள் மீதான கரிசனைக்கு முன்னுரிமையளிக்க நேரிடும். முற்றிலுமாக இல்லாவிட்டாலும்கூட, பகுதியளவிலாவது இறுதி யுத்தம் தொடர்பான சர்வதேசத்தின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியேற்படும். தொடர்ந்தும் பொறுப்புக் கூறலை, இறைமையென்னும் பெயரில் தட்டிக்கழிக்க முடியாதுபோகும். ஆனால், சிங்கள கடும்போக்குவாதிகள் மத்தியில் தங்களை வீர புருசர்களாக காண்பித்துக்கொள்ளும் ஆட்சியாளர்களால், இந்த விடயங்களை முன்னெடுக்க முடியாது. தேர்தல் காலங்களில் சிங்கள – பௌத்த கடும்போக்குவாதிகளை திருப்திப்படுத்துவதற்காக கைக்கொண்ட பிரசாரங்களால், விரும்பியோ, விரும்பாமலோ ஆட்சியாளர்கள், கடந்த காலத்தின் சிறைக்கைதிகளாகவே இருப்பர்.

மறுபுறம் தமிழ் அரசியலை பொறுத்தவரையில், நம்பிக்கைமிக்க தலைமைத்துவம் ஒன்றை வழங்கக்கூடிய நிலையில் எவருமே இல்லை. 2020இன் நிலைமைகள் இதனை தெளிவாக பதிவுசெய்திருந்தன. "துரோகி', 'ஒட்டுக்குழுக்கள்' என்னும் சொற்களின் வழியாக ஒவ்வொருவரும் மேலும் தங்களை தனிமைப்படுத்திக்கொள்ளவும், தங்களுக்குள் பிளவுறுவதற்கான வாய்ப்புக்களே அதிகம் தென்படுகின்றன. ஒப்பீட்டடிப்படையில், இலங்கை அரசாங்கத்தின் மீதான சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்கவே அதிக வாய்ப்புண்டு. ஒப்பீட்டடிப்படையில் இந்த நிலைமை தமிழர்களுக்கு சாதகமான ஒன்றுதான். ஆனால், இவற்றை தந்திரோபாய அடிப்படையில் கையாளக் கூடிய தகுதிநிலையில் தமிழ் தலைமைகள் இல்லை. ஒரு சரியான, ஆளுமைமிக்க தலைமையின்மையின் குறைபாடுகளை 2021இல் தமிழ் மக்கள் நிச்சயம் எதிர்கொள்ள வேண்டியேற்படும். சம்பந்தன் அதிகம் உடல்ரீதியில் தளர்ந்திருக்கும் நிலையில், தலைமைத்துவம் தொடர்பான உள்மோதல்கள் தீவிரமடைவதற்கான வாய்ப்புக்களே பிரகாசமாக தெரிகின்றன. இந்த முரண்பாடுகள் ஒருவரையொருவர் தள்ளிவிடும் நிலைமையை தோற்றுவிக்கலாம்.

இந்த பின்புலத்தில், தமிழர்களுக்கான அரசியலை பொறுத்தவரையில், 2021 அதிகம் சவால்களுக்கான காலமாகவே தெரிகின்றது. வாய்ப்புக்கள் கிடைத்தாலும்கூட, உள் முரண்பாடுகளால், அவை கைநழுவிச் செல்லலாம். இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமாயின், 2020இன் படிப்பினைகளின் அடிப்படையில், தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தும் கட்சிகள், ஏனைய சிறு அமைப்புக்கள் அனைத்தும் ஒரு புள்ளியில் சந்திக்கவேண்டும். இது, களத்திலும் புலத்தில் சம வேளையில் நிகழவேண்டும். இது, பலரும் உச்சரித்து ஓய்ந்துபோன ஒற்றுமை பற்றியதல்ல. இது, முற்றிலும் தந்திரோபாயம் சார்ந்த ஒன்று. தந்திரோபாமயற்ற கூட்டுக்கள், ஒற்றுமை வாதங்களால் பயனில்லையென்பதை 2020 தெளிவாக பதிவு செய்திருக்கின்றது. தந்திரோபாயத்திற்கு முன்னுரிமையளித்து, அனைத்து தரப்பினரும் தாங்கள் இணைவதற்கான புள்ளியை கண்டு கொண்டால் மட்டுமே 2021இன் சவால்களைச் சமாளிக்கமுடியும். இல்லாவிட்டால், 2021இன் முடிவிலும் இந்த ஆசிரிய தலையங்கத்தையே மறுபிரசுரம் செய்ய நேரிடும்.

# இனி ஒரு விதி செய்வோம்!

- அலசுவது **இராஜதந்திரி** -

*உலகம் முழுவதையும் பெரிதும் முடக்கிவிட்ட நிலையில் 2020ஆம் ஆண்டு விடை பெற்றுச் செல்கின்றது. கொவிட்-19 வியாதி மானிடகுலம் முழுவதுக்குமே பெரும் சவாலை ஏற்படுத்தி, உலகின் பல்வேறு துறைகளையும் முடக்கி, பொருளாதார ரீதியாகவும் பலத்த பாதிப்பை ஏற்படுத்தி, இலட்சக்கணக்கான உயிரிழப்புகளுக்கும் வழிவகுத்திருந்தது. 2020ஆம் ஆண்டின் ஆரம்பமே சீனாவின் வுஹான் பிராந்தியத்தில் ஏற்பட்ட கொவிட் - 19 காரணமாக முழுஉலகையுமே அச்சுறுத்த ஆரம்பித்து, தற்சமயம் இக் கொடியவியாதிக்கான தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் புதிய 2021ஆம் ஆண்டு உதயமாகியுள்ளது.*

*கொவிட்-19 வியாதிக்கு தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளபோதிலும் அதன் பயன்பாடு நூறுவீதம் வெற்றியளிக்குமா என்பதுகூட சந்தேகமாகவே இருக்கின்றது. இருந்தபோதிலும், அமெரிக்க உப ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள கமலா ஹரீஸ் உட்பட ஏராளமானவர்கள் உலகளாவிய ரீதியில் புதிய கொவிட்-19 தடுப்பூசியை போட்டுக்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.*

**பொது எதிரி**

*கொவிட்-19 வியாதி முழு உலகுக்குமே ஒரு பொது எதிரியாக விளங்கியிருந்தது. மானிடர்களின் ஒழுங்கீனங்கள், இயற்கையை வஞ்சித்த போக்கு என்பவை காரணமாகவே கொவிட்-19 ஒரு அச்சுறுத்தலாக மனிதகுலத்திற்கு சவால் விட்டிருந்ததை அறியமுடிந்தது. இலங்கையைப் பொறுத்தவரை, கொவிட்-19 ஆரம்ப கட்டத்தில் பெரிதும் கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டிருந்தபோதிலும் அக் கொடிய வியாதியின் தாக்கம் தற்போது பெரும் பாதிப்பை நாடளாவிய ரீதியில் பல்வேறு பிரதேசங்களிலும் ஏற்படுத்தியுள்ளதையே அவதானிக்கமுடிகிறது.*

*இலங்கையின் அரசியல் நிலவரத்தைப் பொறுத்தவரை ஒரு குழப்பகரமான நிலை தொடர்ந்து நிலவிவருவதையே அவதானிக்க முடியும். விமான நிலையங்கள், துறைமுகங்கள் என்பவை கொவிட்-19 காரணமாக மூடப்பட்டுள்ள நிலையில், பொருளாதார ரீதியாக இனிவரும் காலங்களில் ஒரு நெருக்கடியான சூழலுக்கு நாட்டு மக்கள் முகங்கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.*

**வடக்கு-கிழக்கின் அரசியல் மாற்றங்கள்**

*வடக்கு-கிழக்கு அரசியலைப் பொறுத்தவரை பல்வேறு மாற்றங்கள் பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அரசியல் பிரச்னைகள் ஒருபுறமிருக்க, மூன்று தசாப்தகால யுத்தம் ஏற்படுத்திய அவலங்கள் தொடர்ந்து கொண்டிருப்பதையே அவதானிக்க முடிகிறது. அரசியல் ரீதியாக வடக்கு-கிழக்கு மக்களை பிரதிநிதிப்படுத்துவோர் பல்வேறு பின்னடைவுகளையும் சந்தித்தோராகவே இருக்கின்றனர். இந்நிலையில், தென்னிலங்கையின் ஆளுந்தரப்பினர் வடக்கு-கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகள் குறித்து*



*தான்தோன்றித்தனமான முடிவுகளை எடுக்கும் சூழ்நிலைகளே பலமடைந்து வருகின்றன.*

*வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு ஓர் அரசியல் தீர்வை 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மாகாணசபை முறைமையில் கொண்டுவரப்பட்டிருந்தபோதிலும் அம் மாகாணசபை முறைமை தற்போது பின்னடைவுகளை சந்தித்து நலிவடைந்துள்ளதையே காணமுடிகிறது. எனவே, வடக்கு-கிழக்கு மக்களைப் பொறுத்தவரை, ஒரு முக்கிய அரசியல் அம்சமாக இருக்கின்ற மாகாணசபை முறைமை முற்றிலுமாக நீங்கிவிடும் பட்சத்தில், அரசியல் ரீதியாக பலதரப்பட்ட பின்னடைவுகளை எதிர்நோக்க வேண்டிய சூழல்களே வலுவடையும்*

**புதிய பிரேரணை**

*எதிர்வரும் மார்ச் மாதம் ஐ. நா சபையின் மனிதஉரிமை பேரவை கூட்டத் தொடரில் இலங்கை குறித்த புதிய பிரேரணையொன்று கொண்டுவரப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்பட ஆரம்பித்துள்ளன.*

*2016ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணையை மழுங்கடிப்பதில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு முக்கிய வகிபாகத்தை கொண்டிருந்தது. 2016ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்குமேயானால் இலங்கையில் வடக்கு- கிழக்கு மக்களது அரசியல் மற்றும் மனிதாபிமான பிரச்னைகள் தொடர்பாக பல்வேறு தீர்வுகள் கிடைக்கப்பெற்றிருக்கும். ஆயினும், ஜெனிவா பிரேரணையை நிறைவேற்றுவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு புதிய அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்திற்கு கொடுக்கத் தவறிய நிலையில், இலங்கை அரசாங்கமே தமிழ் அரசியல் தரப்பை ஒரு பகடைக்காயாக பாவித்து, ஜெனிவா பிரேரணையை நிறைவேற்றுவதிலிருந்தும் விலகிக்கொண்டதை அவதானிக்க முடிந்தது.*

**கோட்டாபய அரசின் நிலைப்பாடு**

*இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் ஜெனிவா மனித உரிமைப் பேரவை நடவடிக்கைகளிலிருந்து விலகிக் கொள்ளப்போவதாக அறிவித்துள்ள நிலையில், இலங்கையின் வடக்கு-கிழக்கு அரசியல் தரப்பினர் எவ்வாறு எதிர்கால நிலபரங்களை கையாளப்போகிறார்கள்*

*(02ஆம் பக்கம் பார்க்க)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



# தப்பியது கதிரின் தவிசாளர் பதவி

## கருணை காட்டியது இ.தொ.கா.

கொழும்பு, ஜன 01

காங்கிரஸிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தாலும் அக்கரப்பத்தனை தவிசாளர் பதவியில் கதிர்ச்செல்வன் தொடர்ந்தும் செயல்படுவார் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியிருந்த அக்கரபத்தனை பிரதேச சபையின் தவிசாளர், சிகிச்சைகளின் பின்னர் முழுமையாக குணமடைந்து நேற்றுமுன்தினம் வீடு திரும்பினார்.

இந்நிலையில் நேற்று அவர், இ.தொ.கா. அலுவலகத்துக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

தனது செயலுக்காக மன்னிப்பு கோரிய அவர், இனி மேல் அவ்வாறான தவறுகள் இடம்பெறாது என இ.தொ.கா. உயர்பீடத்திடம் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு சொந்த பணத்தில் நிவாரண திட்டங்களை முன்னெடுக்குமாறு உயர்பீடத்தில், கதிர்ச்செல்வனுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பிரதேச சபைகளின் பணிகளை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என கதிர்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.




**மேடம்**
புது முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள். பொருளாதார நிலை உயரும். வியாபாரப் போட்டிகள் அகலும். விரயங்களைச் சமாளிப்பீர்கள்.

**இடபம்**
சுபச் செய்திகள் வந்து சேரும் நாள். தொல்லை தந்தவர்கள் விலகுவர். உறவினர்களின் ஒத்துழைப்பால் மகிச்சியான சம்பவம் ஒன்று நடைபெறும்.

**மிதுனம்**
தனவரவில் இருந்த தடைகள் விலகும் நாள். காலை நேரம் கலகலப்பாக இருக்கும். பணியாளர்களிடம் பக்குவமாக நடந்து கொள்வது நல்லது.

**கடகம்**
புகழ் பெருகும் நாள். எதிர்பார்த்த காரியம் எளிதில் நடைபெறும். தூரதேசத்திலிருந்து அனுகூலச் செய்திகள் வந்து சேரும்.

**சிம்மம்**
செல்வந்தர்களின் சந்திப்பால் சிறப்படையும் நாள். திடீர் வரவு மகிழ்ச்சி தரும். புதிய தொழிலுக்கான வாய்ப்பு கைகூடி வரும்.

**கன்னி**
இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரும் நாள். தொழிலில் லாபம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். கூடப்பிறந்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வர்.

**துலாம்**
பயணங்களால் பலன் கிடைக்கும் நாள். வரவு வருவதில் தாமதம் ஏற்பட்டாலும், தேவைகள் பூர்த்தியாகும். தொழிலில் சீரான வளர்ச்சி உண்டு.

**விருட்சிகம்**
மதியத்திற்கு மேல் மனக்குழப்பம் அகலும் நாள். தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் சிந்தனை மேலோங்கும்.

**தனுசு**
வழிபாட்டின் மூலம் வளம் காண வேண்டிய நாள். எதைச் செய்தாலும், தெளிவாகச் சிந்தித்துச் செய்வது நல்லது.

**மகரம்**
மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். சகோதர சச்சரவுகள் அகலும். மனக்குழப்பங்கள் தீரும். செலவைக் குறைத்து சேமிப்பை உயர்த்துவீர்கள்.

**கும்பம்**
வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும் நாள். வருமானம் திருப்தி தரும். தொழிலில் இருந்த மந்த நிலை மாறும்.

**மீனம்**
கடன் சுமை குறையும் நாள். காலை நேரத்திலேயே நல்ல தகவல் வந்து சேரும். செய்தொழிலில் மேன்மையுண்டு. மனக்கலக்கம் தீரும்.

# டான் தொலைக்காட்சியின் சாதனைத் தமிழன் 2020 விருது பெறும்

## பேராசிரியர் சி.மௌனகுரு



நாடக அரங்கப் பணிகளை மக்கள் மயப்படுத்தியும் உயர்கல்விக்குரிய ஆய்வுப் பொருளாக்கியும் - உயிர்ப்புடன் செயற்படும் ஓய்வுநிலைப் பேராசிரியர் சின்னையா மௌனகுரு அவர்களுக்கு 2020 ஆம் ஆண்டுக்கான சாதனைத் தமிழன் விருதை வழங்குவதில் டான் குழுமம் பெரு மகிழ்வு அடைகின்றது.

### வாழ்வும் பணிக்களங்களும்

மட்டக்களப்பில் உள்ள சீலாமுனை என்ற கிராமத்தில் சின்னையா முத்தம்மாள் ஆகியோரின் இரண்டாவது மகனாக 09.06.1943 இல் பிறந்த இவர் அமிர்தகழி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, வந்தாறுமூலை மத்திய கல்லூரி என்பவற்றில் கல்வி பயின்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டங்களையும் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் இருந்து பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து முனைவர் பட்டத்தையும் பெற்றவர்.

ஆசிரியராக, பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளராக, கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளராக, துறைத் தலைவராக மற்றும் கலைப்பீடாதிபதியாகப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

வடக்கில் 17 ஆண்டுகள் கிழக்கில் 17 ஆண்டுகள் என முப்பத்து நான்கு ஆண்டுகள் கல்வி மற்றும் கலைப்பணிகளை முன்னெடுத்த சிறப்பு இவருக் குரியது.

### கூத்து மற்றும் நாடகத்துறை சார்ந்த உயர்பங்களிப்பு

மக்கள் கலையான கூத்துருவை பல்கலைக்கழக ஆய்வுப் பொருளாக்கி அதன்பால் மாணவர்களையும் ஈடுபாடு கொள்ளச் செய்தார். இதைவிடப் பல நாடகங்களை எழுதியும் நடித்தும் உள்ளார். சிறுவர் நாடகங்கள் பலவற்றை உருவாக்கியதோடு பாடசாலைகளில் நாடகம் மற்றும் கூத்துப் பட்டறைகளையும் நடத்தியுள்ளார். கிராமியக் கலையாக அமைந்த கூத்தைச் சமூக உள்ளடக்கமாக மாற்றிய பெருமை இவரைச் சாரும். கந்தன் கருணை, சங்காரம் என்பவற்றை இந்த வடிவில் விசேடித்துக் கூறலாம். இதனைவிட இவரது தயாரிப்பில் உருவான இராவணேசன் கூத்து வடிவத்தை உலக அரங்கிற்குக் கொண்டு சென்றது.

### நூல்கள் உருவாக்கம்

பேராசிரியர் மௌனகுரு பல நூல்களை ஆக்கியும் ஈழத்தமிழன்னைக்கு வளம் சேர்த்துள்ளார். 20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்(1984), சடங்கிலிருந்து நாடகம் வரை (1985), மௌனகுருவின் மூன்று நாடகங்கள்(1985), தப்பி வந்த தாடி ஆடு(1987) பழையதும் புதியதும்- நாடகம் அரங்கியல்(1992), சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும்(1992),சங்காரம்- ஆற்றுகையும் தாக்கமும்- (நாடகம்)(1993),ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு(1993),கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன் -நீலாவணன்(1994), கலை இலக்கியக் கட்டுரைகள்(1997), சக்தி பிறக்குது - நாடகம் (1997), பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திராவும் ஈழத்து நாடக மரபும்(1998), இராவணேசன் -நாடகம்(1998), மடக்களப்பு மரபுவழி நாடகங்கள்(1998), அரங்கு ஓர் அறிமுகம் -இணை ஆசிரியர்(2000), சுபத்திரன் கவிதைகள் (தொகுப்பாசிரியர்) (2001), வனவாசத்தின் பின் நாடகம் (2002), மட்டக்களப்பு தமிழகத்தில் இந்துப் பண்பாடு -பதிப்பாசிரியர் (2003), அரங்கியல்(2003), ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு (2வது திருத்திய பதிப்பு) (2004), முதலிய முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியராகவும் விளங்குகிறார். இவற்றுள் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய விருதைப் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கள மற்றும் இஸ்லாமியக் கலைஞர்களுடன் தமிழரின் கூத்துருவக் கலையைத் தொடர்புபடுத்தி ஆற்றுகைகள் மேற்கொண்டுள்ளார். இனநல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி விருது மற்றும் கலாகீர்த்தி விருது போன்ற விருதுகளையும் பெற்றுள்ளார்.

தனது வாழ்வியல் பயண அனுபவங்களை டான் தொலைக்காட்சியில் வேரும் விருட்சங்களும் என்ற நிகழ்ச்சியின் மூலம் கடந்த சனவரி முதல் தற்போது வரை - ஒருவருடமாக வியாழக்கிழமை தோறும் இடம்பெற்ற நேர்காணல் பதிவின் மூலம் ஆவணப் படுத்தியுள்ளார்.

இன்று நாடகஞ்சார் துறையில் முதன்மைப் பங்களிப்பாளர்களாகப் போற்றப்படும் பலர் பேராசிரியர் மௌனகுருவின் மாணவர்களாவர். தனது பல்கலைக்கழகப் பணியோய்வின் பின்னர் கிழக்கில் இவர் நிறுவிய அரங்க ஆய்வு கூடம் இவரது 3000 நூல்களையும் 1000 இறுவட்டுக்களையும் கொண்டமைந்த கலைக்கூடமாகத் திகழ்கின்றது.

அருகி வரும் கூத்துக் கலைக்கு உயிர்கொடுக்கும் வகையில் அதனைப் பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வுப் பொருளாக்கியும் பிரயோகநிலையிலும் - கற்றோரையும் மற்றோரையும் இணைத்து ஈழத்தின் நாடகத்துறையை வளர்த்தெடுக்கும் முயற்சிக்காகவும் இனநல்லிணக்க மேம்பாட்டுச் செயற்பாடுகளுக்காகவும் இந்த ஆற்றலாளருக்கு டான் தொலைக்காட்சி 2020 ஆம் ஆண்டுக்கான சாதனைத் தமிழன் விருதை வழங்குவதில் பெருமை கொள்கின்றது.

இந்த உயர்விருதை 2018 இல் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் 2019 இல் கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளாரும் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

**ஆசிரியராக, பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளராக, கிழக்குப் பல் கலைக்கழக நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளராக, துறைத் தலைவராக மற்றும் கலைப் பீடாதிபதியாகப் பணியாற்றிய பெருமைக்குரியவர். வடக்கில் 17 ஆண்டுகள் கிழக்கில் 17 ஆண்டுகள் என முப்பத்து நான்கு ஆண்டுகள் கல்வி மற்றும் கலைப்பணிகளை முன்னெடுத்த சிறப்பு இவருக் குரியது.**




# முஸ்லிம் ஜனாஸா தகனத்துக்கு எதிராக மன்னாரில் போராட்டம்

கொழும்பு, ஜன. 01

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவதற்கு எதிராக நேற்று வியாழக்கிழமை மன்னாரில் அமைதியான முறையில் கண்டன போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை 9 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் மதத்தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள், உப தலைவர்கள், உறுப்பினர்கள், சட்டத்தரணிகள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார், மன்னார் பிரஜைகள் குழுவின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். குறிப்பாக 'சிறுபான்மை இன மக்களின் மரணத்திற்கு இறுதி மரியாதைகொடு', 'ஜனாதிபதி அவர்களே எங்களது ஜனாஸாவை புதைக்க அனுமதி தாருங்கள்', 'ஜனாஸாவை பலாத்காரமாக எரிப்பதை நிறுத்து', 'இனவாத தீ அணையட்டும் இன்றுடன்', 'பிறக்கும் தையோடு தீ வைப்பதை முடித்துவிடு', 'எமது நாட்டில் சிறுபான்மை மக்களின் உரிமையை பறிக்காதே' உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் கண்டன போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

போராட்டத்தை தொடர்ந்து மன்னார் மாவட்ட செயலகத்திற்கு ஊர்வலமாக சென்று ஜனாதிபதிக்கு கொடுக்கும் வகையில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெலிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. (அ)

# சமூக வலைத்தளங்கள் ஊடாக பணம் மோசடி!

## மக்களே அவதானம் என பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 01

சமூக வலைத்தளங்கள் ஊடாக செய்திகளை அனுப்புவதன் ஊடாக பண மோசடியில் ஈடுபடுவோரிடம் அவதானமாக செயற்படுமாறு பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

பரிசுத் தொகை அல்லது பரிசுப் பொருட்கள் வழங்குவதாக சமூக வலைத்தளங்கள் ஊடாக கூறப்படும் செய்திகளை நம்பி ஏமாற வேண்டாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேநேரம், தீர்மானம் மிக்கதான இன்றைய நாளில், வெளிநாடுகளிலுள்ள நண்பர்கள் புதுவருட பரிசுப் பொதிகளை அனுப்பியுள்ளதாக, பரிசுப் பொதிகளை அனுப்புவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அல்லது குறிப்பிட்ட இடங்களில் பரிசுப் பொதிகள் வைக்கப்பட்டுள்ளதாக கூறி பணத்தை வைப்பிலிடுமாறு பேஸ்புக்,வட்ஸப், வைபர், ஐஎம்ஓ ஆகிய சமூக வலைத்தளங்கள் ஊடாக செய்திகள் கிடைக்கலாம் என பிரதி பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான செய்திகளை நம்பி ஏமாற வேண்டாம் எனவும் அறிமுகம் இல்லாதவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை வைப்பிலிடுவதை தவிர்க்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சுற்றுலா விஸாக்கள் மூலம் நாட்டுக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டவர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

நைஜீரியப் பிரஜை ஒருவர் சமூக வலைத்தளத்தினூடாக பெண் ஒருவரிடம் இருந்து கிட்டத்தட்ட 3 கோடி ரூபா பணத்தை மோசடி செய்த சம்பவம் ஒன்று கடந்த வாரத்தில் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 1000 ரூபா இல்லையேல் போராட்டம் வெடிக்கும்

கொழும்பு, ஜன. 01

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் போராட்டம் வெடிக்கும் என்று பெருந்தோட்ட தொழிலாளர் ஊதிய உரிமைக்கான இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

மஸ்கெலியாவில் மேற்படி இயக்கத்தால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டின் போதே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பொகவந்தலாவ தோட்டத்தை சேர்ந்த திருமதி அருளப்பன் இதயஜோதி கூறியவை வருமாறு:

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது. எனினும், ஆறு வருடங்கள் கடக்கவுள்ள நிலையிலும் அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில் பட்ஜெட் ஊடாக மீண்டும் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஜனவரி மாதம் முதல் அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா அவசியம். இல்லையென்றால் போராட்டங்களை முன்னெடுப்போம். தற்போது வாழ்க்கைச்சுமை அதிகரித்துள்ளது. பொருட்கள், சேவைகளின் விலைகள் அதிகரித்துள்ளன. எனவே, எமக்கும் சம்பள உயர்வு அவசியம்-என்றார்.

# 38 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜன. 01

வெளிநாடுகளில் தங்கியிருந்த 38 பேர் நாடு திரும்பியுள்ளனர். இவர்கள் கட்டாரில் இருந்து நாடு திரும்பினர் என கொவிட் 19 பரவுவதைத் தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேலும் 415 இலங்கையர்கள் நாட்டுக்கு வரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, ஓமானில் இருந்து 30 பேர், மாலைதீவில் இருந்து 06 பேர், இத்தாலியில் இருந்து 22 பேர், பாகிஸ்தானில் இருந்து 05 பேர், ருவண்டாவில் இருந்து 06 பேர், இந்தியாவில் இருந்து 290 பேர், ஜேர்மனில் இருந்து 06 பேர் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 50 பேர் நாடு திரும்பவுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

ஈழநாடு
Online
சம்பவங்கள்,
செய்திகள்
உடனுக்குடன்
அறிந்துகொள்ள...
www.eelanadu.lk

# சம்பிக்க எம்மோடு வந்தாலும் சஜித்தான் பொதுவேட்பாளர்!

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்



கொழும்பு, ஜன. 01

**"43 ஆம் படையணி எனும் பெயரில் புதியதொரு அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்புவது குறித்து எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வியக்கமும் எமது அணியுடன் இணைந்தே செயற்படும். எது எப்படி இருந்தாலும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரே ஜனாதிபதி வேட்பாளர். இதனை வேறு எவருக்கும் வழங்கமாட்டோம்." என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, 43ஆவது படையணி எனும் பெயரில் புதியதொரு அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கு சம்பிக்க ரணவக்கவால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஜனநாயக அம்சங்களை அடிப்படையாகக்கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் கட்சி பலப்படுத்தப்படும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய கூட்டணி அமைக்கப்படும். இக்கூட்டணியில் எமது கொள்கையுடன் ஒத்து போகக்கூடியவர்கள் இணையலாம். அதற்கான அழைப்பை விடுக்கின்றோம்.

சம்பிக்க ரணவக்க ஐக்கிய மக்கள் சக்தியில் இணையவுள்ளார். 43 என்ற அரசியல் இயக்கம் பற்றி எமக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கு எதிராக பல வழிகளிலும் தாக்குதல்களை தொடுக்க வேண்டும். அதற்காக அணிகள் இருப்பது சிறப்பு.

எது எப்படியிருந்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் கூட்டணியின் தலைவராக சஜித் பிரேமதாசவே செயற்படுவார். அவ்வாறு தலைவர் பதவியை வகிப்பவரே ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார். பொது வேட்பாளராக மாற்று கட்சி வேட்பாளர்களை நிறுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்படாது. அவ்வாறு வழங்கி கட்சிக்கும், ஆதரவாளர்களுக்கும் ஏற்பட்ட அநீதிகள் தொடர்பான படிப்பினை எமக்கு இருக்கின்றது-என்றார்.

# மதுபோதையில் சாரத்தியம்; 1398 சாரதிகள் கைது

கொழும்பு, ஜன. 01

மதுபோதையில் வாகனம் செலுத்திய 1398 சாரதிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்துவோரைக் கைது செய்வதற்காக மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 82 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

டிசெம்பர் 20ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட போக்குவரத்து திட்டத்தின் கீழ் மதுபோதையில் வாகனம் செலுத்திய 1398 சாரதிகளை இதுவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.



# மஹர சிறைச்சாலை கலவரம் இறுதி அறிக்கை கையளிப்பு

கொழும்பு, ஜன 01

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு ,அதன் இறுதி அறிக்கையை நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியிடம் கையளித்துள்ளது.

குழுவின் தலைவரான முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி குஸலா சரோஜினி வீரவர்தன தலைமையில் இறுதி அறிக்கை நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

நீதி அமைச்சர் அலி சப்ரியால் குறித்த நிபுணர்கள்குழு கடந்த நவம்பர் மாதம் 29ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

குழுவின் இடைக்கால அறிக்கை கடந்த 7ஆம் திகதி கையளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஒரு மாத காலத்திற்குள் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு இந்தக் குழுவிற்கு பணிப்புரை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மாகாணசபை தேர்தல் இப்போது வேண்டாம்

## மல்வத்துபீடம் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 01

**மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தவேண்டாம் என்று இலங்கையிலுள்ள மிக முக்கிய பௌத்த பீடங்களில் ஒன்றான மல்வத்துபீடம் வலியுறுத்தியுள்ளது.**



இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மல்வத்து பீடத்தின் அனுநாயக்கர் திம்புல்கும்புரே விமலதர்ம தேரர் கூறியவை வருமாறு:

மாகாணசபை என்பது வெள்ளையானை. அதனிடம் வேலை வாங்கமுடியாது. மாறாக உணவுகளை மாத்திரமே வழங்கிக்கொண்டிருக்க வேண்டும். அவ்வாறானதொரு நிலைமை எமது நாட்டுக்கு தேவையில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இன்று மக்கள் வாழும் பகுதிகளுக்கு நேரில் சென்று பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்கிவருகின்றார். எனவே, மாகாணசபைகள் வேண்டாம். அதற்கான தேர்தலை நடத்த வேண்டாம் என மகாநாயக்க தேரர்களின் சார்பில் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார்.

அதேவேளை, கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு சார்பாக செயற்பட்ட பௌத்த அமைப்புகளும், பௌத்த தேரர்களும் மாகாண சபை முறைமையவேண்டாம், அதனை இல்லா தொழிக்கவேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மல்வத்துபீடத்தின் முக்கிய தேரரும் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

(அ)

# அருவியாற்றில் காணாமல்போன கிராம சேவகர் சடலமாக மீட்பு!

மன்னார், ஜன 01

மன்னார் நானாட்டான் அருவியாற்றில் நண்பர்களுடன் குளித்த போது சுழலில் சிக்கி காணாமல் போயிருந்த கிராம சேவகரை கடந்த இரு நாட்களாக தேடிவந்த நிலையில் அவரது சடலம் நேற்றுக் காலை அரிப்பு பழைய தோணித்துறை பகுதியில் கரையொதுங்கியுள்ளது.

காணாமல்போய் தற்போது சடலமாக மீட்கப்பட்ட கிராம அலுவலகர் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள தோமஸ்புரி கிராம அலுவலகர் பிரிவில் கிராம அலுவலராகக் கடமையாற்றும் ஜனார்த்தனன் (வயது-26) என தெரிய வந்துள்ளது.

நான்கு கிராம அலுவலர்கள் உள்ளடங்களாக 6 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் அருவியாற்றுப் பாலத்தின் அடியில் சமையல் செய்து வருட இறுதி கொண்டாட்டத்தில் ஈடுபட்ட நேரத்தில் அருவியாற்றில் குளிக்கும்போது இவ் அனர்த்தம் ஏற்பட்டிருந்தது.

இதன் போது கிராம அலுவலர்கள் ஆற்றில் குளித்தபோது ஒரு கிராம அலுவலகர் காணாமல் போனதோடு, ஏனைய கிராம அலுவலர்கள் மீட்கப்பட்டனர்.

காணாமல்போன கிராம சேவையாளர் நானாட்டான் கட்டைக்காட்டு பகுதியைச் சேர்ந்தவர் என தெரிய வந்துள்ளதோடு அவரை தேடும் பணி இடம்பெற்றது.

கடற்படை மற்றும் வங்காலை, அரிப்பு கிராம மீனவர்களும் இணைந்து தேடுதல்களை மேற்கொண்டிருந்த போதிலும் சடலம் மீட்கப்படவில்லை.

இந்த நிலையில் நேற்று புதன்கிழமை காலை அரிப்பில் இருந்து கடல் தொழில் நடவடிக்கைக்காக சென்ற மீனவர்கள் குறித்த சடலத்தை கண்டு அரிப்பு ஆலய நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

இதையடுத்தே அருவி ஆற்றில் காணாமல்போன கிராம அலுவலரது சடலம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# இரணைமடு குளத்தின் 6 வான் கதவுகள் திறப்பு

## தாழ்நிலப்பகுதி மக்களுக்கு எச்சரிக்கை

கிளிநொச்சி, ஜன. 01

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் மேலும் ஆறு வான் கதவுகள் திறக்கப்படுகின்ற நிலையில் தாழ்நிலப் பகுதியில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் மேலும் ஆறு வான்கதவுகள் திறக்கப்பட்டன என நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே படிப்படியாக கதவுகள் திறக்கப்படும் என அறிவித்திருந்த நிலையில் 6 கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இரவு பெய்த பலத்த மழை காரணமாக நீர் வரத்து அதிகரித்துள்ளது. 36 அடி கொள்ளளவு கொண்ட இரணைமடுக் குளம் அடைவுமட்டத்தை அடைந்து 2.5 அங்குலம் வான் பாய்ந்து வந்தது. இந்த நிலையில் மேலும் நீர் வரத்து அதிகரித்தமையால் ஆரம்பத்தில் இரண்டு வான்கதவுகளும் பின்னர் மேலும் இரு வான் கதவுகளும் 6 அங்குலம் திறந்து விடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர் வரத்து மேலும் அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் மேலும் அளவுமட்டத்தில் அதிகரிப்பு செய்யவோ அல்லது மேலும் கதவுகளை திறப்பது தொடர்பிலோ தீர்மானிக்கப்படும் எனவும், இவ்விடயம் தொடர் பில் முழுமையான கண் காணிப்பு இடம்பெற்று வருவதாகவும் நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை, வெள்ள அனர்த்தம் தொடர்பான முன்னெச்சரிக்கைகள் ஏற்கனவே தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வந்த நிலையில் பன்னங்கண்டி, முரசுமோட்டை, பரந்தன், ஊரியான், கண்டாவளை, உமையாள்பரம் உள்ளிட்ட பகுதி மக்கள் அவதானமாக செயற்படுமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தி உள்ளது.

குளங்களை அண்மித்த தாழ்நில பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ள முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறும், குளங்களை பார்வையிடுதல், நீராடுதல் மற்றும் மீன்பிடிப்பதில் ஈடுபடுதல் ஆகியவற்றை தவிர்க்குமாறும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

தொடர்ச்சியான மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் மக்கள் அவதானமாக செயற்படுமாறும், இடர் ஏதும் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கிராமசேவையாளர் அல்லது இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் உதவியை பெற்றுக்கொள்ளுமாறும் மாவட்ட இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.



### வவுனியா நீர் நிலையில் விழுந்து உயிருக்கு போராடும் யானை!

வவுனியா, ஜன 01

நீர் நிலையில் விழுந்த யானை ஒன்று உயிருக்கு போராடும் சம்பவம் வவுனியா பெரியகட்டு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா கண்னாட்டி பெரியகட்டு காட்டுப் பகுதியில் உள்ள நீர் நிலையில் விழுந்த யானை ஒன்று உயிருக்குப் போராடி வருகிறது.

கால்கள் இயலாத காரணத்தினால் எழுந்து நடக்க முடியாமல் நீர்நிலையில் உயிருக்கு போராடிக்கொண்டு இருக்கும் யானையை பிரதேசவாசிகள் அவதானித்துள்ளனர். இதனையடுத்து வனஜீவராசி கள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு குறித்த யானையை மீட்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப் படவுள்ளமை குறிப்பிடதக்கது.

# 2021 இற்குள் நுழையும் 1000 ரூபா! கூட்டு ஒப்பந்தப் பேச்சு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன 01

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை நிர்ணயிக்கின்ற கூட்டு ஒப்பந்த பேச்சு எதிர்வரும் ஜனவரி 7 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சம்பள உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தை இன்று 31 ஆம் திகதி நடைபெறும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், அக்கரபத்தனை பிரதேச சபையின் தவிசாளருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதால், இ.தொ.கா. பிரமுகர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர். ஏனெனில் அவர்கள் பங்கேற்றிருந்த நிகழ்வுகளில் அக்கரபத்தனை பிரதேச சபைத் தலைவரும் பங்கேற்றிருந்தார்.

இந்நிலையில் ஏனையவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலும், தனிமைப்படுத்தல் விதிமுறைகளை இன்னும் சில நாட்களுக்குப் பின்பற்றவேண்டியுள்ளது. இதன்காரணமாகவே கூட்டு ஒப்பந்த பேச்சு பிற்போடப்பட்டுள்ளது.



# மினி சூறாவளியால் 65 வீடுகள் சேதம்

மட்டக்களப்பு,ஜன.01

மட்டக்களப்பு கோரளைப் பற்று தெற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட சந்திவெளி பாலையடித்தோனா கிராமத்தில் 65 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என அரசாங்க அதிபர் க.கருணாகரன் தெரிவித்தார்.

சேதமடைந்த வீடுகளை முழுமையாகப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கையை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். இதற்கான மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்று நட்டஈடு வழங்கும் நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

நட்புறவு கிராமத்தில் கடந்த 28 ஆம் திகதி பெய்த கடும் சுழிக்காற்றுடன் கூடிய மழை இரவு 9 மணி முதல் 15 நிமிடங்களுக்கு தொடர்ந்து வீசியதனால் பகுதியளவில் 65 வீடுகள் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப்பிரிவிலும் கோரளைப் பற்று பிரதேச செயலகப்பிரிவின் கும்புறுமுலை கிராமத்தில் 2 வீடுகளும் சேதமடைந்துள்ளன.

சேதமடைந்த வீடுகளுக்கான நட்டஈடு வழங்கும் நடவடிக்கையில் மாவட்ட செயலகமும், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரும், இணைந்து பிரதேச செயலகங்களுக்கு வழங்கவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்தனர். (எ)

# தமிழ் விவசாயிகள் மோசமாக பாதிப்பு

## கஜேந்திரன் எம்.பி விசனம்



வவுனியா,ஜன.01

**இந்த அரசாங்கமானது சிங்கள மக்களின் பொருளாதாரத்தை வளர்க்கும் செயல்பாட்டை முன்னெடுக்கின்றது. அத்துடன் தமிழ் விவசாயிகள் மோசமாகப் பந்தாடப்படுகின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

தமது காணிகளை வன வளத் திணைக்களத்திடமிருந்து மீட்டுத்தருமாறு ஆசிக்குளம் கிராம மக்கள் வவுனியா மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று வியாழக்கிழமை முறைப்பாடு ஒன்றை கையளித்தனர். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனும் உடனிருந்தார்.

அதன் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

பொதுமக்களுக்கு சொந்தமான காணிகள் வன வள திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளன.

திடீரென வருகை தந்த அவர்கள் மக்களுக்கு எந்தவிதமான முன்னறிவித்தலையும் வழங்காமல் மக்களின் காணிகளில் மரங்களை நாட்டியுள்ளனர்.

அந்த பகுதிகளுக்குள் மக்கள் செல்லக்கூடாது. மாடுகளையும் மேய்ச்சலுக்கு விடக்கூடாது என்று அச்சுறுத்தியுள்ளனர். இந்த செயற்பாடானது மக்களின் உரிமைகளை மீறும் செயற்பாடாகவே உள்ளது.

இதனுடன் தொடர்புடைய அமைச்சர் எமக்கு உறுதிமொழிகளை தந்தபோதும் இன்று வரை இந்த காணிகள் மக்களிடம் கையளிக்கப்படவில்லை.

ஒருபுறத்தில் விவசாயிகளை பாதுகாக்கப்போகின்றோம் என்று ஜனாதிபதி பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

அவை சிங்கள பெரும்பான்மை மக்களுடைய பொருளாதாரத்தை பெருப்பிப்பதற்கான நோக்கத்தில் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றதே தவிர தமிழ் விவசாயிகள் மோசமாக அழிக்கப்படும் நிலைதான் காணப்படுகின்றது.

எங்கள் விசாயிகள் பந்தாடப்படுகின்றார்கள். நிலங்கள் பறிக்கப்படுகின்றன. அனைத்து திணைக்களங்களும் தமிழர்களது நிலங்களை கபளீகரம் செய்து தமிழ் மக்களது விவசாய பொரு ளாதாரத்தை அழிக்கின்ற செயல்பாட்டையே மேற்கொண்டு வருகிறது.

இந்தச் செயல்பாடு தொடர்வதற்கு அனுமதிக்கமுடியாது. அந்தக் காணிகளை மக்களிடம் பெற்றுக்கொடுக்கும் வரைக்கும் நாம் அவர்களுடன் நிற்போம்-என்றார்.

# விளையாட்டு போட்டிகளுக்கு பாடசாலைகளில் அனுமதியில்லை

## கல்வி அமைச்சின் செயலர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 01

விளையாட்டுப் போட்டிகள் மற்றும் அது சார்ந்த விடயங்களுக்கு சுகாதார பிரிவால் பச்சை சமிக்ஞை காட்டப்பட்டால் மாத்திரமே, அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனவரி 11ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும், அங்கு எவ்விதமான விளையாட்டுப் போட்டிகளுக்கும் அனுமதி வழங்கப்படாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளை மீளத் திறப்பது குறித்து, சுகாதாரப் பிரிவினருடன் கலந்தாலோசித்த பின்னரே தீர்மானிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# பழுகாமத்தில் ஆண் மாயம்

மட்டக்களப்பு, ஜன 01

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பழுகாமத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கூலிவேலைக்குச் சென்ற நிலையில் காணாமல்போயுள்ளார் எனவும், அவர் பயணித்த, சைக்கிள் பழுகாமம் குளத்துக்கு அருகில் மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பழுகாமம் 2ஆம் பிரிவு வன்னிநகரைச் சேர்ந்த 52 வயதுடைய வல்லிபுரம் ஞானசேகரம் என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.



# நாவல்காடு பகுதியில் மனித எச்சங்கள் மீட்பு

முல்லைத்தீவு, ஜன 01

முல்லைத்தீவு-முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவல்காடு பகுதியில் நேற்று முன்தினம் இனங்காணப்பட்ட மனித எச்சங்களை மீட்கும் பணிகள் நீதிமன்ற அனுமதிக்கு அமைவாக நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றின் பதில் நீதிபதி ந.சுதர்சன் முன்னிலையில் குறித்த அகழ்வு மற்றும் மீட்புப் பணிகள் இடம்பெற்றன.

தடயவியல் பொலிஸார், பொலிஸார் மற்றும் சட்ட வைத்திய அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் இணைந்து இந்த மனித எச்சங்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, நைலோன்சாரம், ரீசேர்ட், மண்டையோடு மற்றும் எலும்புகள் உள்ளிட்ட தடயப் பொருட்கள் மீட்கப்பட்டன.

மேலும் இந்த விடயம் தொடர்பாக முள்ளியவளை பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் இணைந்து தொடர் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

SPOTLIGHT
அரசியல் நிகழ்ச்சி

ஞாயிறு இரவு 7 மணிக்கு
டான் தமிழ்ஒளியில்

இவ்வாரம் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்கிறார்



அனுசரணை




# மோட்டார் ஷெல்கள் மீட்பு

கிளிநொச்சி, ஜன 01

கிளிநொச்சியில் பளை அரசாங்க மருத்துவமனைக்கு அருகிலுள்ள ஒரு காணியில் புதைக்கப்பட்டிருந்த 55 மோட்டார் எறிகணைகளை பொலிஸார் விஷேட அதிரடிப் படையினருடன் இணைந்து மீட்டுள்ளனர்.

நிலத்தின் உரிமையாளர் குழி தோண்டியபோது இவற்றை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

பொலிஸார் அனைத்து மோட்டார் எறிகணைகளையும் மீட்டெடுத்து அவற்றை செயலிழக்கச் செய்யவென கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றின் உத்தரவைப் பெற்றுள்ளனர்.

# 2020இன் முக்கிய பதிவுகள்

## இலங்கை

■ ஜனவரி 25 - முதலாவது கொரோனா தொற்றாளியாக சீனாவை சேர்ந்த பெண் இனங்காணப்பட்டார்.

■ 
பெப்ரவரி 11 - ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்த சஜித் பிரேமதாஸ தலைமையிலானோர் ஐக்கிய மக்கள் சக்தி என்ற கூட்டணியை உருவாக்கினர்.

■ பெப்ரவரி 19 - இறுதிப்போரின்போது இடம்பெற்ற போர் குற்றங்கள் குறித்த விசாரணைக்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு வழங்கும் இணை அனுசரணையை திரும்பப் பெறுவதாக பிரதமர் மஹிந்த அறிவித்தார்.



■ மார்ச் 10 - முதலாவது இலங்கையர் தொற்றாளியாக இனங்காணப்பட்டார்.

■ மார்ச் 12 - தொற்றுப் பரவல் அச்சத்தால் நாடு முழுவதும் பாடசாலைகள் மூடப்பட்டன.

■ மார்ச் 16 - கொரோனா தொற்றை தடுக்க பொது முடக்கம் அறிவிக்கப்பட்டது.

■ மார்ச் 27 - முதலாவது இலங்கையர் கொரோனா தொற்றால் சுவிஸில் மரணமானார்.

■ மார்ச் 28 - முதல் இலங்கையர் தொற்றால் நாட்டில் மரணமானார்.

■ மே 11 - அரச நிறுவனங்கள் புதிய சுகாதார வழிகாட்டலின்படி இயங்க ஆரம்பித்தன.

■ மே 21 - ரமழான் தினத்தன்று பணம் விநியோகத்த ஒருவரால் ஏற்பட்ட நெரிசலில் மூவர் மரணமாகினர். 9 பேர் படுகாயமடைந்தனர்.

■ மே 31 - குருநாகலில் மஞ்சள் நிற படை வெட்டுக்கிளிகள் இனங்காணப்பட்டன.

■ ஜூன் 05 - மங்கள சமரவீர அரசியலில் இருந்து ஒதுங்குவதாக அறிவித்தார்.

■ ஜூன் 13 - 48000 ஆண்டுகளுக்கு வேட்டையாடப் பயன்படுத்தப்பட்ட விலங்குகளின் எலும்புகளாலான கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

■ ஜூன் 15 - நாடு முழுவதும் உள்ள தேசிய பூங்காக்கள் சுகாதார விதிகளுக்கு அமைய திறக்கப்பட்டது.

■ 
ஜூன் 19- நீருக்கடியில் அருங்காட்சியகம் காலியில் திறக்கப்பட்டது

■ ஜூன் 29 - 105 நாட்களின் பின்னர் பாடசாலைகள் ஆரம்பமாகின.

■ ஜூலை -08 முன்னாள் அமைச்சர் ரோஹித போகல்லாகம ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகினார்.

■ ஜூலை 10 - கந்தக்காடு சிகிச்சை கொரோனா கொத்தணி இனங்காணப்பட்டது.

■ ஜூலை 12 - மீண்டும் பாடசாலைகள் மூடப்பட்டன.



■ ஜூலை 31 - முன்னாள் சி.ஐ.டி. பணிப்பாள் சானி அபேசேகர, முன்னாள் பொலிஸ் அதிகாரி சஜின் வாஸ் குணவர்த்தனவுக்கு எதிராக பொய்யான ஆதாரங்களை சமர்ப்பித்த குற்றச்சாட்டில் கைதானார்.

■ ஓகஸ்ட் 01 - தரங்க பரணவிதான கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்

■ ஓகஸ்ட் 05 - 16ஆவது பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

■ ஓகஸ்ட் 06 - ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 145 ஆசனங்களைப் பெற்று பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது.

■ ஓகஸ்ட் 10 -பாடசாலைகள் மீண்டும் ஆரம்பம்.

■ ஓகஸ்ட் 11 - மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் 13ஆவது பிரதமராக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டார்.



■ ஓகஸ்ட் 17 - தொழில்நுட்ப செயலிழப்பால் நாடு முழுவதும் மின்சார தடை ஏற்பட்டது.

■ 
ஓகஸ்ட் 20 - மஹிந்த யாப்பா அபேவர்த்தனர் 16ஆவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக நியமிக்கப்பட்டார்.

■ ஓகஸ்ட் 20 - தேசிய விளையாட்டு சபையின் தலைவராக மஹேல ஜெயவர்த்தன நியமனம்.

■ ஓகஸ்ட் 28 - கண்டியில் லேசான நில அதிர்வு உணரப்பட்டது.

■ ஓகஸ்ட் 31 - தலதா மாளிகையின் உத்தியோகபூர்வ இணையம் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

■ செப்ரெம்பர் 02 - தரம் 6 -13 வரையான பாடசாலைகள் மீள ஆரம்பம்.

■ செப்ரெம்பர் 03 - எம்.ரி. நியூ டயமண்ட் எண்ணெய் கப்பல் இலங்கை அருகே தீப்பற் றியது.

■ செப்ரெம்பர் 08 - கொலைக் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்ட பிரேம்லால் ஜெயசேகர பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்தார்.

■ செப். 20 - கண்டியில் 5 மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் மூவர் உயிரிழந்தனர்.

■ ஒக்ரேபர் 04 - மினுவாங்கொடை கொத்தணியில் முதல் தொற்று அடையாளம்.

■ ஒக்ரோபர் 05 - தொற்று பரவலால் அனைத்து பாடசாலைகளும் மீண்டும் மூடப்பட்டன.

■ ஒக்ரோபர் 09 - முன்னாள் அமைச்சரும் சீனாவின் சக்தி வாய்ந்த அதிகாரியுமான யாங் ஜியெசி கொழும்பு வந்தார்.

■ ஒக்ரோபர் 11 - மன்னாரில் பட்டித்தோட்டம், பெரியகடை பகுதிகள் தொற்று பரவலால் தனிமைப்படுத்தப்பட்டன.

■ ஒக்ரோபர் 12 - தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு 362,824 மாணவர்கள் தோற்றினர்.



■ 
ஒக்ரோபர் 19 - முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கைது

■ ஒக்ரோபர் 20 - பிரபல பாதள உலகத் தலைவர் மாகந்துரே மதுஷ் சுட்டுக் கொல்லப்பட்டார்.

■ நவம்பர் 23 - மூன்றாம் தவணைக்காக மீண்டும் பாடசாலைகள் ஆரம்பம்.

■ நவம்பர் 27 - கொரோனா தொற்று மரணம் 100 ஐ கடந்தது.

■ நவம்பர் 27 - சி.டி. விக்ரமரத்தின 35ஆவது பொலிஸ் மா அதிபராகப் பொறுப்பேற்றார்.

■ நவம்பர் 28 - கொரோனா தொற்று காரணமாக 600 கைதிகளுக்கு விடுதலை

■ நவம்பர் 29 - மஹர சிறைக் கலவரத்தில் 11 கைதிகள் உயிரிழந்தனர். 71 பேர் காயமடைந்தனர்.



■ நவம்பர் 30 - முதன்முதலாக காணொலி நுட்ப முறையில் அமைச்சரவை கூட்டம் இடம்பெற்றது.

■ டிசெம்பர் 04 புரேவி புயலால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கின. இருவர் உயிரிழந்தனர்.

■ டிசெம்பர் 5- கொரோனா தொற்று 20,000 எண்ணிக்கையை கடந்தது.

■ டிசெம்பர் 8 - மன்னாரில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் பிரதமரால் திறந்து வைக்கப்பட்டது.



■ டிசெம்பர் 15 - உயர்நீதிமன்றத்தில் தீப்பற்றியது. முக்கிய ஆவணங்கள் பல எரிந்தன.

■ 
டிசெம்பர் 16 - எல்.பி.எல். தொடரில் யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் சம்பியனை கைப்பற்றியது.

■ டிசெம்பர் 28 - இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, பாதுகாப்பு செயலர் கமல் குணரட்ண ஆகியோர் நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட ஜெனரல்களாக பதவி உயர்த்தப்பட்டனர்.

■ டிசெம்பர் 30 - யாழ்ப்பாணம் மாநகர முதல்வராக வி. மணிவண்ணன் தெரிவானார்.



# 2020இன் முக்கிய பதிவுகள்

## உலகம்

- ஜனவரி 03 - ஈரானின் புரட்சிப்படை தளபதி காசிம் சுலைமானி ஈராக்கின் பாக்தாத் நகரில் அமெரிக்காவின் ஆளில்லா விமான தாக்குதலில் கொல்லப்பட்டார்.
- ஜனவரி 08 - ஈராக்கில் அமெரிக்க படை முகாம்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இதேவேளை, விமானம் ஒன்று தாக்கப்பட்டதில் 176 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- ஜனவரி 13 - அதிகார துஷ்பிரயோகத்திற்காக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மீது செனட் சபை விசாரணை ஆரம்பமானது.
- ஜனவரி 23 - கொரோனா வைரஸ் காரணமாக சீனாவின் வுஹான் நகரில் 76 நாட்களுக்கு முழு ஊரடங்கு நடைமுறை.
- ஜனவரி - 30 கொரோனா தொற்று அச்சம் காரமணாக உலகம் முழுவதும் அவசரநிலையை உலக சுகாதார அமைப்பு பிரகடனம் செய்தது.
- பெப்ரவரி 11 - சீனாவில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸுக்கு கொவிட்-19 என உலக சுகாதார அமைப்பு அதிகாரபூர்வமாக பெயர் வைத்தது.
- பெப்ரவரி 23 - இந்திய குடியுரிமை திருத்தச்சட்டத்திற்கு எதிரான போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறையில் 53 பேர் உயிரிழந்தனர்.
- பெப்ரவரி 23 - அனைத்து வகை பொதுப் போக்குவரத்தையும் பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்த அனுமதியளித்த உலகின் முதல் நாடு என்ற பெருமையை லக்சம்பேர்க் நாடு பெற்றது.
- மார்ச் 9 - கொரோனா தொற்றால் இத்தாலியில் முழு ஊரடங்கு நடைமுறை.
- மார்ச் 11 - கொரோனா வைரஸ் ஒரு ’பெருந் தொற்று’ என உலக சுகாதார அமைப்பு அறிவித்தது.
- மார்ச் 24 - ஜப்பானில் நடைபெறவிருந்த 2020 ஒலிம்பிக் போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டது.
- மார்ச் 26 - உலக அளவில் கொரோனா பரவியவர்கள் எண்ணிக்கை 5 இலட்சத்தை கடந்தது. பலி எண்ணிக்கை 23 ஆயிரத்தை நெருங்கியது.
- மார்ச் 26 - கொரோனா பரவலால் உள்நாட்டு சண்டையை நிறுத்துமாறு ஐ.நா. பொதுச்செயலாளர் விடுத்த அழைப்பை சிரியா, ஏமன், லிபியா, பிலிப்பைன்ஸ் நாடுகளின் போராளிகள் குழுக்கள் ஏற்றன.
- ஏப்ரல் 05 - மனிதர்களை தாண்டி முதல் முறையாக நியூயார்க் பூங்காவில் உள்ள புலி ஒன்றுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டது.
- ஏப்ரல் 08 - வுஹானில் விதிக்கப்பட்ட ஊரடங்கு 76 நாட்களின் பின்னர் நீக்கம்.
- ஏப்ரல் 10 - உலக அளவில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை கடந்தது.
- ஏப்ரல் 14 - கொரோனா பரவல் குறித்த தகவலை மறைத்ததாக உலக சுகாதார அமைப்பு மீது குற்றம் சுமத்திய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அந்த அமைப்புக்கு வழங்கிவந்த நிதியை நிறுத்தினார்.
- ஏப்ரல் 29 - கனடாவின் நோவா ஸ்காட்யா நகரில் கேப்ரியல் வார்ட்மென் என்ற நபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 22 பேர் உயிரிழந்தனர்.
- மே 10 - பயிற்சியின் போது ஈரான் கடற்படை போர் கப்பல் மற்றொரு ஈரான் பயிற்சி கப்பல் மீது தவறுதலாக ஏவுகணை தாக்குதல் நடத்தியதில் 19 பேர் உயிரிழந்தனர்.
- மே 21 - இந்தியாவில் உருவான அம்பன் புயல் இந்திய-வங்காளதேச கடல் எல்லையில் கரையை கடந்தது. இந்த புயலால் 100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.
- மே 22 - பாகிஸ்தான் விமானம் கராச்சியின் குடியிருப்பு பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் 99 பேர் உயிரிழந்தனர்.
- மே 25 - அமெரிக்க பொலிஸாரின் தாக்குதலில் ஜோர்ஜ் பிளைட் கொல்லப்பட்டார். இதையடுத்து பிளைக் லைவ் மேற்றர் என்ற பெரும் போராட்டம் உலகம் முழுவதும் வெடித்தது.
- மே 27 கொரோனா வைரசுக்கு அமெரிக்காவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை கடந்தது.
- ஜூன் 15 - கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய-சீன இராணுவம் மோதல். இந்திய தரப்பில் 20, சீனத் தரப்பில் 40 பேருமாக 60 பேர் மரணம்.
- ஜூன் 28 - உலக அளவில் கொரோனா பலி எண்ணிக்கை 5 இலட்சத்தை கடந்தது.
- ஜூலை - 2 மியான்மர் நாட்டில் உள்ள சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 174 பேர் உயிரிழந்தனர்.
- ஜூலை 10 - துருக்கியின் இஸ்தான்புல்லில் உள்ள ஹேகியா சோபியா வரலாற்று அருங்காட்சியகத்தை இஸ்லாமிய மத வழிபாட்டு தளமான மசூதியாக மாற்ற ஜனாதிபதி எர்டோகன் உத்தரவிட்டார்.
- ஜூலை 12 - சீனாவில் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 141 பேர் உயிரிழந்தனர்.
- ஜூலை 15 - இந்திய பிரதமர் மோடி, அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா, மைக்ரோ சொப்ட் தலைவர் பில் கேட்ஸ் உள்பட உலகின் மிகவும் பிரபலமான நபர்களின் ருவிட்டர் கணக்குகள் மர்மநபர்களால் ஹேக் செய்யப்பட்டு முடக்கப்பட்டன.
- ஓகஸ்ட் 04 - லெபனான் நாட்டின் பெய்ரூட் நகர துறைமுகத்தில் பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. அங்கு சேமிக்கப்பட்ட அமோனியம் நைத்ரேற் இரசாயனப் பொருளால் ஏற்பட்ட வெடிவிபத்தில் 220 பேர் உயிரிழந்தனர். 3 இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர்.
- ஓகஸ்ட் 11 - உலகின் முதல் கொரோனா தடுப்பூசிக்கு (ஸ்புட்னிக் வி) ரஷியா அனுமதி அளித்ததாக ஜனாதிபதி புடின் அதிகாரபூர்வமாக அறிவித்தார்.
- ஓகஸ்ட் 18 - 1,000 தொன் கச்சா எண்ணெய் ஏற்றிவந்த ஜப்பான் நாட்டுக்கு சொந்தமான எண்ணெய் கப்பல் மொறிசீயல் தீவு பகுதியில் விபத்துக்குள்ளானதில் பெரும் சூழல் அழிவு ஏற்பட்டது.
- ஓகஸ்ட் 28 - உடல் நலத்தை கருத்தில் கொண்டு ஜப்பான் பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாக ஜின்சோ அபே அறிவித்தார்.
- செப். 04 - இஸ்ரேல் - பஹ்ரைன் இடையே அமைதி உடன்படிக்கை கைச்சாத்து.
- செப். 16 - ஜின்சோ அபே பதவி விலகியதையடுத்து ஜப்பானின் புதிய பிரதமராக யோஷிஹைட் சுஹா பொறுப்பேற்றார்.
- செப். 27 நாகோர்னா - காராபக் மாகாணத்தை மையமாக கொண்டு அர்மீனியா - அசர்பைஜான் நாடுகளுக்கு இடையே போர் தொடங்கியது.
- ஒக்ரோபர் 17 - நியூசிலாந்து தேர்தலில் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்னின் கட்சி மீண்டும் வெற்றிபெற்றது. மீண்டும் அவரே பிரதமரானார்.
- ஒக்ரோபர் 29 - செனகல் நாட்டின் கடல்பரப்பில் அகதிகள் படகு கவிழ்ந்து 140 பேர் உயிரிழந்தனர்.
- ஒக்ரோபர் 30 - துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 81 பேர் உயிரிழந்தனர்.
- நவம்பர் 04 -பாரிஸ் பருவநிலை மாற்ற உடன்படிக்கையில் இருந்து அமெரிக்கா அதிகாரபூர்வமாக விலகியது.
- நவம்பர் 07 - அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜோ பைடனும், துணை ஜனாதிபதியாக கமலா ஹரீஸும் வெற்றிபெற்றனர்.
- நவம்பர் 08 - உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 கோடியை தாண்டியது.
- நவம்பர் 09 - அசர்பைஜானுடனான போரில் அர்மீனியா தோல்வியடைந்தது.
- நவம்பர் 11 - ரஷ்யாவின் ஸ்புட்னிக் - வி கொரோனா தடுப்பூசி 92 வீதம் செயல்திறன் கொண்டது என அறிவிக்கப்பட்டது.
- நவம்பர் 12 - ஹொங்கொங் பாராளுமன்றத்தில் இருந்து ஜனநாயக ஆதரவு உறுப்பினர்கள் அனைவரும் கூண்டோடு இராஜினாமா செய்தனர்.
- நவம்பர் 16 - மொடர்னா நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசி 94.5 வீதம் செயல்திறன் கொண்டது என அறிவிக்கப்பட்டது.
- நவம்பர் 18 - அனைத்துக்கட்ட பரிசோதனைகளும் முடிவடைந்ததையடுத்து பைசர் நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசி 95 வீதம் செயல்திறன் கொண்டது என அறிவிக்கப்பட்டது.
- நவம்பர் 20 - இந்தியாவின் மத்திய அரசு கொண்டுவந்த வேளாண் சட்டங்களை எதிர்த்து விவசாயிகள் போராட்டங்களை ஆரம்பித்தனர்.
- நவம்பர் 27 - ஈரானின் மூத்த அணு விஞ்ஞானி மொஹ்சென் பக்ரிசாதே கொல்லப்பட்டார். இந்தத் தாக்குதல் செயற்கைகோளின் துணையுடன் தானாக துப்பாக்கி இயக்கப்பட்டது. இந்தத் தாக்குதல் உலகின் போர் யுக்தியை அடுத்த கட்டத்துக்கு கொண்டு சென்றது.
- நவம்பர் 30 - மொடர்னா நிறுவனம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் கொரோனா தடுப்பூசி அனுமதிக்காக விண்ணப்பித்தது.
- நவம்பர் 30 - இந்தியாவில் பஞ்சாப், அரியானா விவசாயிகள் வேளாண் சட்டங்களை எதிர்த்து டில்லி நோக்கி தங்கள் பேரணியை தொடங்கினர். அதன் பின்னர் டெல்லி எல்லைகளில் விவசாயிகள் போராட்டத்தை தொடர்கின்றனர்.
- டிசெம்பர் 03 - பைசர் நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசியை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர முதல் நாடாக இங்கிலாந்து அனுமதி அளித்தது.
- டிசெம்பர் 05 - ரஷ்யாவில் ஸ்புட்னிக் வி கொரோனா தடுப்பூசி மிகப்பெரிய அளவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பணி தொடங்கப்பட்டது.
- டிசெம்பர் 08 - உலகின் முதல் நாடாக இங்கிலாந்தில் கொரோனா தடுப்பூசி மக்களுக்கு போடும் பணி தொடங்கப்பட்டது.
- டிசெம்பர் 14 - பைசர் நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசி அமெரிக்காவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

# யாழில் 5731 பேர் தனிமைப்படுத்தல்

## அரச அதிபர் தகவல்



யாழ்ப்பாணம்,ஜன.01

யாழ். மாவட்டத்தில் 5,731 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 149 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா தொற்றுக்குள்ளாகிய 26 பேர் குணமடைந்து வீடு திரும்பினர்.

இந்நிலையில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுடன் நெருங்கிப் பழகிய சுமார் 2 ஆயிரத்து 35 குடும்பங்களைச் சேர்ந்த 5,731 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் இரண்டு தடவைகளில் அந்தந்த பிரதேச செயலகங்கள் மூலம் வழங்கியுள்ளோம்.

பொதுமக்கள் இந்த நிலைமையில் கொரோனா மேலும் பரவாது தடுக்க அவதானமாக செயல்படுவது மிகவும் முக்கியமானது.

அத்தோடு சுகாதாரப் பிரிவு மற்றும் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களைப் பின்பற்றிப் பொதுமக்கள் செயல்பட வேண்டும்.

அநாவசியமான போக்குவரத்தைத் தவிர்த்து தேவை ஏற்படும்போது மட்டும் பயணங்களை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (எ)

# உக்ரைன் சுற்றுலாப் பயணிகளில் இதுவரை 6 பேருக்கு கொரோனா



கொழும்பு,ஜன.01

**உக்ரைனிலிருந்து இலங்கை வந்த சுற்றுலாப் பயணிகளில் மேலும் 03 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கொரோனா தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.**

இதற்கமைய உக்ரைனிலி ருந்து வந்த சுற்றுலாப் பயணி களில் இதுவரையில் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நோயாளிகள் அனை வரும் அவர்கள் தங்கியுள்ள ஹோட்டலில் அமைக்கப்பட் டுள்ள சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். என சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் இந்த விடயம் தமக் குப் பாரிய அச்சுறுத்தலாக இல் லையென்றும் இதை தாம் எதிர் பார்த்திருந்ததாகவும் சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

ஏனைய நாடுகளும் கொரோனா வைரஸால் பாதிக் கப்பட்டுள்ள நிலையில், வெளிநாடுகளிலிருந்து வரும் அனைத்துப் பயணிகளுக்கும் சோதனை முடிவுகள் எதிர் மறையாக இருக்கும் என எதிர் பார்க்க முடியாது. எனவே தாம் எல்லாவற்றிக்கும் தயாராகவே இருந்ததாகவும் இதைப் பற்றி மக்கள் பீதியடையத் தேவையில்லை.

கடந்த திங்கள்கிழமை சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையங்கள் திறக்கப் பட்டதன் பின்னர், 180 சுற்று லாப் பயணிகளுடன் இலங்கைக்கான முதல் பயணிகள் விமானம் உக்ரைனிலிருந்து மத் தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

அதன் பின்னர் இரண்டாவது குழுவாக கடந்த 29ஆம் திகதி உக்ரைனிலிருந்து மேலும் 204 சுற்றுலாப் பயணிகள் இலங்கையை வந்தடைந் தனர். (எ)

# இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்குள் ஊடுருவிய கொரோனா

இரத்தினபுரி,ஜன.01

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் உள்ளிட்ட சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அன்ரிஜென் பரிசோதனைகளின் மூலம் இவர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும். இரத்தினபுரி வைத்தியசாலையின் 24ஆவது இலக்க விடுதியில் அனுமதிக் கப்பட்டிருந்த 9 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இவர்களின் மூலம் மற்றைய நோயாளர்களுக்கு தொற்று பரவியிருக்கலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இரத்தினபுரி வைத்தியசாலையில் நேற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இதன் முடிவுகளில் தொற்றாளர்கள் அதிகரித்தல், அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் பேசப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# 5 கொரோனா நோயாளிகள் தப்பியோட்டம்

கொழும்பு,ஜன.01

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த 05 பேர் நேற்றுக் காலை தப்பிச்சென்றுள்ளனர்.

பொலநறுவை - கல்லேல பகுதியிலுள்ள கொரோனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தொற்றாளர்களே இவ்வாறு தப்பிச்சென்றுள்ளனர்.

இதனையடுத்து அவர்களைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# காத்தான்குடியை 5 நாள்கள் தனிமைப்படுத்த நடவடிக்கை

மட்டக்களப்பு,ஜன.01

மட்டக்களப்பு - காத்தான்குடி பகுதியைத் தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் தேசிய செயலணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

காத்தான்குடி பகுதியை எதிர்வரும் 05 நாள்களுக்கு தனிமைப்படுத்துவது தொடர்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

காத்தான்குடியைச் சேர்ந்த 50 பேருக்கு கொரனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று நோயாளர்கள் கொரோனா தொற்றால் உயிரிழந்தனர் என்றும் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் சுயமாகச் சிந்தித்து சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றவேண்டும்- என்றார். (எ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழைபெய்யக்கூடும்

கொழும்பு,ஜன.01


வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்றுக்காலை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் - வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா மாகாணத்திலும் பொலநறுவை, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன்



கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புக்களில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது 30 - 40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

கொழும்பிலிருந்து புத்தளம், காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஊடாக காலி வரையான கடற்பரப்புக்களில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கொழும்பிலிருந்து புத்தளம், காங்கேசந்துறை மற்றும் திருகோணமலை ஊடாக காலி வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப் பாகக் காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புக்கள் மிதமான அலையுடன் காணப்படும் - என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# பெரமுனவிலிருந்தும் விரைவில் சஜித் தரப்புடன் பலர் இணைவர்

## மத்தும பண்டார நம்பிக்கை



கொழும்பு,ஜன.01

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து மாத்திரமின்றி ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிலிருந்தும் வெகுவிரைவில் பலர் எம்முடன் இணைந்து கொள்ளத் தயாராகவுள்ளனர். இதனை மிக நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றோம் என ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மக்களின் நிலைப்பாடுகள், தொழிற்சங்கள் மற்றும் அரசியல் நிபுணர்களின் பரிந்துரைகள் உள்ளிட்டவற்றை உள்ளடக்கி ஐக்கிய மக்கள் சக்தி யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த யாப்பு உருவாக்கத்தில் கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, யாப்பு உருவாக்கக் குழுவின் அங்கத்தவர்களாக ஜனாதிபதி சட்டத்தரணிகளான திசத் விஜயமுனி, ஹர்மான் ஹசிம், நிமேஷ் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

ஏனைய கட்சிகளை விட ஜனநாயக முறையில் இந்த யாப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மக்களிடம் அதிகாரம் காணப்படும் யாப்பாகவே நாம் இதனை உருவாக்கியுள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பையும் அடிப்படையாகக் கொண்டே இந்த யாப்பு உருவாக்கப்பட்டுள்ளது. எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பும் காலப்போக்கில் சர்வாதிகாரமானதாக மாற்றப்பட்டமையாலேயே மக்கள் அந்தக் கட்சிக்கு வாக்களிக்காமல் புறக்கணித்துள்ளனர்.

எமது நிறைவேற்றுக்குழுவிலும் மக்களால் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களே அங்கம் வகிக்கின்றனர். இதேபோன்று கீழ் மட்டத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகளும் இதில் உள்ளடங்குகின்றனர். கட்சியின் செயற்குழு உறுப்பினர்களை 75 ஆக வரையறுத்துள்ளோம்.

இதில் கட்சியின் தலைவர், செயலாளர், உப தலைவர்கள், சிரேஷ்ட தலைவர்கள் உள்ளிட்டோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தை வருடத்துக்கு ஒரு முறை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று வருடாந்தம் மாநாடு நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் கட்சி உறுப்புரிமையை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (எ)



# எந்த தேர்தலையும் எதிர்கொள்ள தயார்

## ஐக்கிய மக்கள் சக்தி திடம்

கொழும்பு,ஜன.01

**2024 ஆம் ஆண்டில் மீண்டும் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. அதற்கு முன்னர் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களும் இடம்பெறவுள்ளன. எந்தத் தேர்தலானாலும் அதனை எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் தயாராகவேயுள்ளது என தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 19 ஆம் திகதி பண்டாரவளையில் ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பு நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு யாதெனில் சர்வாதிகார தலைமைத்துவம் என்பதாகும்.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பு மிகவும் ஜனநாயக ரீதியில் உருவாக்கப்பட்டுள்ளது. பலரது பரிந்துரைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. முக்கிய தீர்மானங்களை எடுக்கும் போது அனைவரதும் இணக்கப்பாடு கவனத்தில் கொள்ளப்படும். எந்தவொரு தீர்மானமும் தன்னிச்சையாக எடுக்கப்பட மாட்டாது.

பொதுத் தேர்தலின் போது தற்காலிக யாப்பு மூலமே போட்டியிட்டோம். எனினும் தற்போது கட்சிக்கான உறுதியான யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளதால் எதிர்வரும் தேர்தல்களில் திட்டமிட்ட வகையில் செயல்பாடுகளை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும். 2024 இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. இதற்கு முன்னர் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல் என்பவற்றுக்கும் முகம்கொடுக்க நேரிடும். எந்தத் தேர்தலானாலும் அதற்கு முகம்கொடுப்பதற்கு நாம் தற்போதும் தயாராகவேயுள்ளோம்.

தற்போது நாட்டு மக்களுக்கு காணப்படும் ஒரேயொரு மாற்று வழி ஐக்கிய மக்கள் சக்தியும், சஜித் பிரேமதாஸவும் மாத்திரமே. கட்சி யாப்பு எதிர்காலத்துக்கு ஏற்ற வகையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. இன,மத பேதமின்றி உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையின் தனித்துவத்தன்மையை பொதுவாக ஏற்றுக்கொண்ட யாப்பாக எமது யாப்பு அமைந்துள்ளது. இதன் சின்னம் தொலைபேசி என்பதில் மாற்றமில்லை.

வடக்கு- கிழக்கில் அதிகாரப் பிரச்னைக்கான தீர்வாகவே இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. இதனை இலங்கை அரசாங்கத்தால் தனித்து நீக்க முடியாது- என்றார். (எ)

# புதிய தொழில் முனைவோருக்கு அறிவு வழங்கி ஊக்கப்படுத்துக

## பஸில் ராஜபக்ஷ ஆலோசனை

கொழும்பு,ஜன.01

கிராம மட்டத்தில் புதிய தொழில் அதிபர்களை உருவாக்கும் போது புதிய தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவோருக்கான அறிவினை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்துமாறு பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ, விதாதா அதிகாரிகள் மற்றும் திறன் மேம்பாட்டு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தற்போது இளைஞர்களுக்கிடையில் வேலையில்லாப் பிரச்னை அதிகளவில் காணப்படுவதுடன் இவர்களுக்கான புதிய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்த திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் இராஜாங்க அமைச்சு மற்றும் பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப் பொருள்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு ஆகியவற்றால் செயல்படுத்தப்படும் 2021 வரவு - செலவுத் திட்டத்தை கிராம மட்டத்தில் செயல்படுத்தத் தேவையான ஆதரவை வழங்குமாறும் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திறன் அபிவிருத்தி தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பிலும், பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப் பொருள்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாடு தொடர்பிலும் அலரிமாளிகையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

விதாதா அதிகாரிகள் அற்ற பிரதேச செயலக அலுவலகங்களுக்கு பட்டதாரிப் பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பிலும் இங்கு விரிவாக விவாதிக்கப்பட்டது.

அனைவருக்கும் தொழில் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி, தொழில் கல்விக்கான வாய்ப்புக்களை அதிகரித்தல், வேலைவாய்ப்பு சந்தைக்கு ஏற்ற பாடத்திட்டத்தை மேம்படுத்தல், தொழில் கல்வி நடவடிக்கைகளை பிரதேச ரீதியாக விரிவுபடுத்தல், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை இலக்காகக் கொண்டு தொழில்நுட்ப மற்றும் உயர் தொழில் கல்வி வழங்கல் தொடர்பான விடயங்கள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கொரு தொழில் அதிபர் என்ற ரீதியில் 14 ஆயிரத்து 22 புதிய தொழில் அதிபர்களை உருவாக்க இம்முறை வரவு - செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், விதாதா அதிகாரிகள் புதிய தொழில் முனைவோர்களை அடையாளங்கண்டு அவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியுள்ளது.

இதன் கீழ் பாரம்பரிய கிராமங்கள், ஒன்றிணைந்த அபிவிருத்தி வேலைத்திட்டமொன்றும் செயல்படுத்தப்படும். அரச நிறுவனங்களை ஒன்றிணைத்து தொழில்நுட்ப உதவி மற்றும் நிதியுதவிகளைப் பெற்றுக் கொடுத்து கிராம மக்களை பலப்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மேல் மாகாண பாடசாலைகளை திறப்பதில் தாமதம்

கொழும்பு,ஜன.01

ஜனவரி 11ஆம் திகதி பாடசாலைகளைத் திறப்பதற்கான வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் மேல் மாகாணத்தில் பாடசாலைகளைத் திறப்பதில் மேலும் கால தாமதம் ஏற்படலாம் என்றும் தெரிவித்தார் கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவையை செயல்படுத்துவது தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது - என்றார். (எ)

# கொழும்பில் மட்டும் இதுவரை 18,110 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஜன.01

நாட்டில் நேற்று முன்தினம் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட 639 பேரில் 133 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதன்படி கொழும்பில் மட்டும் கொரோனா இரண்டாவது அலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 18 ஆயிரத்து 110 ஆக அதிகரித்துள்ளது.

இதனைத் தவிர்த்து நேற்று முன்தினம் கம்பஹாவில் 190 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவிசாவளை ஆடைத்தொழில்சாலையில் 83 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்தோடு, கண்டியில் 89 பேர், களுத்துறையில் 50 பேர், அம்பாறையில் 42 பேர், இரத்தினபுரியில் 27 பேர் மற்றும் யாழ்ப்பாணத்தில் 21 பேர், கேகாலையில் 19 பேர், குருநாகலில் 18 பேர், காலியில் 10 பேர், மாத்தறையில் 09 பேர், மட்டக்களப்பில் 08 பேர் மற்றும் மாத்தளையில் 05 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை திருகோணமலையில் 04 பேர், அம்பாந்தோட்டையில் 03 பேர், புத்தளத்தில் 02 பேர், மொனராகலையில் 02 பேர், பதுளையில் 02 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் முல்லைத்தீவு மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த 03 பேரும் நேற்று முன்தினம் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் அடங்குகின்றனர் என கொரோனா தடுப்பிற்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (எ)



# சுவிஸ் முதியவர் மரணத்துக்கு வைரஸ் தடுப்பூசி காரணமல்ல

## மருத்துவர்கள் விளக்கம்

பேர்ண், ஜன. 01

சுவிற்சர்லாந்தின் லூசேர் னில் முதுமை நோய்ப் பராமரிப் பகம் ஒன்றில் வயோதிபர் ஒருவர் வைரஸ் தடுப் பூசி ஏற்றப்பட்டு ஐந்து நாட்களின் பின்னர் உயிரிழந் துள்ளார்.

சுவிஸின் மத்திய கன்ரன் பிரதேசமாகிய லூசேர்ன் அதி காரிகள் இந்த மரணம் தொடர் பாக மேலதிக தகவல்களை வெளியிடவில்லை.

சுவிஸில் கடந்த வாரம் முதல் தடவை தடுப்பூசி ஏற்றப் பட்டவர்களில் ஒருவரான 91 வயதான அந்த வயோதிபர் ஏற்கனவே பல்வேறு தீவிர நோய்களுக்காகப் பராமரிக் கப்பட்டுவந்தவர் எனத் தெரி விக்கப்படுகிறது.

"பைசர் - பயோஎன்ரெக்" வைரஸ் தடுப்பூசிக்கும் இத் தகைய அரிதான மரணங்களுக் கும் சாத்தியங்கள் மிகக் குறைவு என்று சுவிஸ் மருந்துக்கட்டுப் பாட்டு நிபுணர்கள் வயோதி பரது மரணம் தொடர்பாக விளக்கமளித்துள்ளனர்.

"கொரோனா தடுப்பூசியின் பக்க விளைவுகள் தீவிர மாகக் கண்காணிக்கப்பட்டு வருகின் றன. நோய்களுக்கோ அன்றி மரணத்துக்கோ தடுப்பு மருந்து காரணமாக இருப்பது நிரூபிக் கப்படவில்லை. அதற்கான வாய்ப்புகள் மிக அரிது"- என்று சுவிஸ் மருந்துக் கட்டுப்பாட்டு ஏஜென்சி "சுவிஸ்மெடிக்" தெரி வித்துள்ளது.

ஒருவருக்கு நோய் மற்றும் முதுமை காரணமாக இயல்பாக நிகழ்கின்ற மரணம் தடுப்பூசி ஏற்றப்பட்ட காலப்பகுதியிலும் இடம்பெறலாம்.

ஏற்கனவே உயிராபத்தான நிலையில் இருந்தவர்களுக்கு ஊசி ஏற்றப்பட்ட நாள்களில் மரணங்கள் நிகழலாம். அத்த கையோர் மரண ஆபத்தை ஏற்கனவே நெருங்கியவர்கள். தடுப்பூசி ஏற்றிய மறுநாளே மரணம் தற்செயலாக நிகழ வாய்ப்பிருக்கிறது.

துல்லியமான காரணங்களை அறியாமல் ஒரு முடிவுக்கு வந்துவிடக்கூடாது.

- இவ்வாறு "சுவிஸ்மெடிக்" ஓர் அறிக்கையில் தெரிவித்துள் ளது.

# ஜேர்மனியில் ஒரு நாளில் ஆயிரம் உயிரிழப்புகள்!

## பொதுமுடக்க கட்டுப்பாடுகள் நீடிக்கும்?

பேர்லின், ஜன. 01

**ஜேர்மனியில் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியது முதல் இதுவரை இருந்திராத எண்ணிக்கையில் ஒரு நாள் உயிரிழப்புகள் அதிகரித்துள் ளன.**



கடந்த புதன்கிழமை வெளி யான புள்ளி விவரங்களின்படி 24 மணிநேரங்களில் அதிகூடிய எண்ணிக்கையாக 1,129 வைரஸ் தொற்று மரணங்கள் பதிவாகி உள்ளன.இதே காலப்பகுதியில் 22ஆயி ரத்து 459 தொற்றுக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

தொற்று நோய்களுக்கான றொபேர்ட் கொச் நிலையம் இந்த விவரங்களை வெளியிட் டுள்ளது.

ஜேர்மனி அதன் இரண்டா வது பொது முடக்கக் கட்டுப் பாடுகளை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தி உள்ள நிலையில் அங்கு வைரஸ் பர வல் நிலைவரம் மோசமடைந்து செல்கிறது. கடைகள் உணவகங் கள், அருந்தகங்கள், களியாட்ட மையங்கள் மற்றும் பாட சாலைகள், பகல் பராமரிப்பு நிலையங்கள் போன்றவை மாநிலங்கள் எங்கும் மூடப் பட்டுள்ளன.

ஜனவரி 10 ஆம் திகதிவரை இந்தக் கட்டுப்பாடுகள் அங்கு அமுலில் இருக்கும். ஆனால் தொற்றுக்களும் உயிரிழப்பு களும் உயர்ந்து செல்வதால் இந்தத் திகதிக் குப் பின்னரும் கட்டுப்பாடுகளை தொடர்ந்து நீடிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

பொது முடக்க நீடிப்புத் தொடர்பாக மத்திய அரசு மாநில ஆட்சியாளர்களுடன் ஜனவரி 5ஆம் திகதி கலந்தா லோசிக்க உள்ளது.

ஐரோப்பாவின் ஏனைய நாடுகளைப் போன்றே ஜேர் மனியும் "பைசர் - பயோ என்ரெக்" வைரஸ் தடுப்பூசி ஏற்றும் திட்டத்தை ஆரம்பித் துள்ளது.

# கருக்கலைப்பு சட்டபூர்வம்; அறிவித்தது ஆர்ஜென்ரீனா

புயூனோஸ் அயர்ஸ், ஜன. 01

ஆர்ஜென்ரீனா கருக்கலைப்பை சட்டபூர்வ மாக்கிய மிகப்பெரிய லத்தீன் அமெரிக்க நாடாக மாறியுள்ளது.

நேற்று முன் தினம் புதன்கிழமை அதிகாலை 4 மணிக்குப் பிறகு இதன் முடிவு அறிவிக்கப்பட்ட தால், புயூனோஸ் அயர்ஸின் நியோகிளாசிக்கல் காங்கிரஸின் அரண்மனைக்கு வெளியே பெண்கள் கொண்டாட்டத்தில் திளைத்தனர்.

பெண்கள் மகிழ்ச்சியுடன் கத்தினார்கள், தங் கள் நண்பர்களை இறுக்கமாக அணைத்துக் கொண்டு, பரவசத்தில் குதித்தார்கள். பலர் ஆனந் தக் கண்ணீர் விட்டார்கள்.

ஆர்ஜென்ரீனா பாராளுமன்றத்தின் மேலவை யான செனட் சபையில், பெண்கள் கர்ப்பமாகிய 14 வாரங்களுக்குள் செய்யப்படும் கருக்கலைப்பை சட்டப்பூர்வமாக்குவதற்கான சட்டமூலம் நிறைவேறியது.

தொடர்ச்சியாக நடத்த விவாதத்துக்கு பிறகு நடந்த வாக்கெடுப்பில் 38 செனட் உறுப்பினர்கள் இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். 29பேர் இதற்கு எதிராக வாக்களித்தனர். இதைத் தொடர்ந்து இந்த சட்டமூலம் வெற்றிகரமாக நிறைவேறியது.

# பைஸர் தடுப்பூசி போட்டுக்கொண்ட தாதியையும் தாக்கியது கொரோனா!

வாஷிங்ரன், ஜன. 01

அமெரிக்காவில் பைஸர் கொரோனா தடுப்பூசி போட் டுக்கொண்ட தாதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி யாகியுள்ள நிலையில் அந்தத் தடுப்பூசியின் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளன.

ஒரு வாரத்துக்கு முன்னரே அந்த தாதி தடுப்பூசி போட்டுக் கொண்டார். இந்நிலையில் பைஸர் தடுப்பூசி உடலில் எதிர்ப்பு சக்தியை உருவாக்க சிறிது காலம் எடுத்துக் கொள் ளும் என பைஸர் மருந்தாக்க நிறுவனத்தின் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

உலக அளவில் கொரோனா வைரஸ் பாதிப்பில் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வரும் அமெரிக்காவில் பைஸர் மற்றும் மொடர்னா கொரோனா தடுப்பூசிகள் பொதுப் பயன்பாட்டுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், உலகில் மேலும் பல நாடுகளும் பைஸர் தடுப் பூசியை பொதுப் பயன்பாட் டுக்கு அங்கீகரித்துள்ளன.

பைஸர் கொரோனா வைரஸ்



தடுப்பூசி கொரோனாவை ஒழிப்பதில் 95 சதவீதம் செயல் திறனுடன் உள்ளதாக மருந் தாக்க நிறுவனம் அறிவித்திருந் தது.

இந்நிலையில் பைஸர் தடுப்பூசியைப் போட்டுக் கொண்ட தாதி ஒருவருக்கு தடுப்பூசி போட்ட ஒரு வாரத் துக்கு பின்னர் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு இருப்பது அதிர்ச்சியை ஏற் படுத்தியுள்ளது.

கலிபோர்னியா மாகாணத் தைச் சேர்ந்த 45 வயதான மத்யூ என்ற தாதி கடந்த 18 ஆம் திகதி கொரோனா தடுப்பூசி போட் டுக்கொண்டார். தடுப்பூசி போட்டதால் கையில் ஒரு நாளைக்கு புண் இருந்ததை தவிர வேறு எந்தவிதமான பக்க விளைவுகளும் ஏற்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் தடுப்பூசி போட்ட 6 நாட்களின் பின்ன அவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் கொரோனா பரி சோதனை செய்தார். இதில் அவருக்கு வைரஸ் தொற்று இருப்பது உறுதியானது குறிப்பிடத்தக்கது.

# வீட்டு வாடகை உதவிப்பணம் இனிமேல் மூன்று மாதத்துக்கு ஒருமுறை மாறலாம்

## பிரான்ஸில் புத்தாண்டில் புது நடைமுறை

பாரிஸ், ஜன. 01

பிரான்ஸில் ஜனவரி 1, 2021 முதல் வீட்டுவாடகை உதவிக் கொடுப்பனவு வழங்கும் நடை முறையில் மாற்றங்கள் வருகின் றன. இனிமேல் தற்போது நடை முறையில் இருப்பது போன்று ஆண்டு முழுவதும் மாதாந்தம் ஒரே தொகை உதவிப்பணமா கக் கிடைக்காது.

அதன்படி குடியிருப்பாள ரது சமகால வருமானத்தின் அடிப்படையில் வாடகை உதவித் தொகை தீர்மானிக்கப் படவுள்ளது. மூன்று மாத காலப்பகுதிக்கு ஒருமுறை வருமானத்தைக் கணக்கிட்டு அதன்படி உதவிப் பணம் எவ்வளவு என்பது கணிப்பிடப் படும்.

குடியிருப்பாளர் ஒருவரது முதல் ஆண்டு மொத்த வருமா னத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்ற வாடகை உதவித் தொகை இனி மேல் மூன்று மாத காலப் பகுதிக்கு ஒரு முறை கூடிக் குறையலாம். ஆண்டு முழுவ தும் 12மாதங்களுக்கும் ஒரே தொகை வழங்கும் நடைமுறை இனிமேல் இருக்காது.



வீட்டுவாடகை உதவிப் பணத் திட்டத்தை மறுசீரமைக் கும் இந்தப் புதிய நடைமுறை காரணமாக சுமார் ஆறு மில்லி யன் குடியிருப்பாளர் கள் பாதிக்கப்படுவர் என்று தகவல் வெளியாகியிருக்கிறது.

மூன்று மாதகால வருமானத் தின் மொத்த அளவைக் கணிக் கும் புதிய நடை முறையை குடும்ப நல உதவி நிறுவனம் வழமை போன்று மேற்கொள் ளும். இணைய வழியில் அல்லது தபால் ஊடாக வருமானத்தை உறுதிப்படுத்து மாறு குடியிருப்பாளர்கள் கேட்கப்படுவர்.

மறுசீரமைப்பு தொடர்பான முழுமையான விவரங்கள் அடங்கிய கடிதங்கள் சகல குடி யிருப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலிடத்தில் வில்லியம்சன்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் துடுப்பாட்ட மற்றும் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியாகியுள்ளது. 2020 ஆம் ஆண்டு நிறைவுற்ற நிலையில், இந்த தரவரிசைப் பட்டியில் முக்கியத்துவம் பெறுகின்றது.

இதில் முதலாவதாக முதல் பத்து இடங்களில் உள்ள டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

இந்தப் பட்டியலில், நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் இரண்டு இடங்கள் முன்னேறி 890 புள்ளிகளுடன் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோலி, 879 புள்ளிகளுடன் தொடர்ந்து இரண்டாவது இடத்தில் நீடிக்கிறார்.

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் ஸ்டீவ் ஸ்மித், இரண்டு இடங்கள் பின்தள்ளப்பட்டு 877 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மார்னஸ் லபுஸ்சேகன் 850 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், பாகிஸ்தானின் பாபர் அசாம் 789 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

இந்தியாவின் அஜிங்கியா ரஹானே 784 புள்ளிகளுடன் ஆறாவது இடத்திலும், அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர் 777 புள்ளிகளுடன் 1 இடம் பின்தள்ளப்பட்டு 777 புள்ளிகளுடன் ஏழாவது இடத்திலும், இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ் ஒரு இடம் பின்தள்ளப்பட்டு 760 புள்ளிகளுடன் எட்டாவது இடத்திலும் உள்ளனர்.

இங்கிலாந்து ஜோ ரூட் 738 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்தில் நீடிக்கிறார். இரண்டு இடங்கள் பின்தள்ளப்பட்டு இந்தியாவின் செடீஸ்வர் புஜாரா 728 புள்ளிகளுடன் பத்தாவது இடத்தில் உள்ளார்.

பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசைப்பட்டியலில், அவுஸ்திரேலியாவின் பட் கம்மின்ஸ் 906 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

இங்கிலாந்தின் ஸ்டுவர்ட் ப்ரோட் 845 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், நியூஸிலாந்தின் நெய்ல் வாக்னர் 833 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் நியூஸிலாந்தின் ரிம் சௌதி 826 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் உள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டாக் இரண்டு இடங்கள் முன்னேறி 804 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திற்கு ஏற்றம் கண்டுள்ளார்.

தென்னாபிரிக்காவில் காகிஸோ ரபாடா, 794 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தில் நீடிக்கிறார். இந்தியாவின் அஸ்வின் இரண்டு இடங்கள் முன்னேறி 793 புள்ளிகளுடன் ஏழாவது இடத்திற்கு ஏற்றம் கண்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் ஜோஸ் ஹசில்வூட் மூன்று இடங்கள் பின்தள்ளப்பட்டு 790 புள்ளிகளுடன் எட்டாவது இடத்தில் உள்ளார். இந்தியாவின் ஜஸ்பிரிட் பும்ரா 783 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்தில் உள்ளார். இங்கிலாந்தின் ஜேம்ஸ் அண்டர்சன் இரண்டு இடங்கள் பின்தள்ளப்பட்டு 10ஆவது இடத்தில் உள்ளார்.

# வலுப்பெறுகிறது ஆஸி



மெல்போர்னில் நடந்த 2ஆவது டெஸ்ட் போட்டியில் அடைந்த தோல்விக்குப் பின், அணியில் 3 மாற்றங்களைச் செய்து சிட்னியில் வரும் ஜனவரி 7ஆம் திகதி நடக்கும் 3ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியை எதிர்கொள்ளத் தயராகிறது அவுஸ்திரேலிய அணி.

சிட்னியில் 3ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாட உள்ள 18 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணியில் தொடக்க ஆட்டக்காரர் டேவிட் வோர்னர், வில் புகோவ்ஸ்கி, வேகப்பந்துவீச்சாளர் ஷேன் அபாட் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளார்கள். அதேபோல, கடந்த சில போட்டிகளாக துடுப்பாட்டத்தில் சோபிக்காத ஜோ பர்ன்ஸ் அணியிலிருந்து விடுவிக்கப்பட்டு அவர் மீண்டும் பிரிஸ்பேன் ஹீட் அணிக்குச் செல்கிறார்.

மெல்போர்னில் நடந்த 2ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக மோசமான தோல்வியைச் சந்தித்த நிலையில், வேறு வழியின்றி, வோர்னரை அணிக்குள் அழைத்துள்ளது அவுஸ்திரேலிய அணி.

பயிற்சி ஆட்டத்தில் இந்திய வீரர் கார்த்திக் தியாகி வீசிய பந்தில் ஹெல்மெட்டில் பந்து தாக்கி கன்கஸனில் வெளியேறிய வில் புகோவ்ஸ்கி அணிக்குள் வந்துள்ளார்.

தொடக்க ஆட்டக்காரர் மாத்யூ வேட் அணியில் இருந்தாலும், சிட்னியில் ஜனவரி 7ஆம் திகதி தொடங்கும் 3ஆவது டெஸ்ட் போட்டியில் டேவிட் வோர்னருடன் இணைந்து வில் புகோவ்ஸ்கிதான் ஆட்டத்தைத் தொடங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

3ஆவது டெஸ்ட் போட்டிக்கான ஆஸி. அணி விவரம்:

டிம் பெய்ன் (தலைவர்), பாட் கம்மின்ஸ், ஷான் அபாட், கேமரூன் க்ரீன், ஜோஷ் ஹேசல்வுட், மார்கஸ் ஹாரிஸ், டிராவிஸ் ஹெட், ஹென்ரிக்ஸ், லாபுஷேன், நாதன் லேயான், மைக்கேல் நீஸர், ஜேம்ஸ் பட்டின்ஸன், வில் புகோவ்ஸ்கி, ஸ்டீவ் ஸ்மித், மிட்ஷெல் ஸ்டார்க், மைக்கேல் ஸ்வீப்ஸன், மேத்யூ வேட், டேவிட் வோர்னர்.

# தென்னாபிரிக்க அணியில் மேலும் ஒரு மாற்றம்!

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் தென்னாபிரிக்கா அணியில், மேலும் ஒரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது அணியில் இடம்பெற்றுள்ள மைக்கேல் பிரிட்டோரியஸை விடுவித்து பியூரன் ஹென்ட்ரிக்ஸைக் அணிக்குள் கொண்டுவர அணிநிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

முன்னதாக இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் ககிசோ ரபாடாவை சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஷஇரு அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி ஜோகனஸ்பர்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இத்தொடரில் முதல் போட்டியில், இனிங்ஸ் மற்றும் 45 ஓட்டங்களால் சிறப்பான வெற்றியை பதிவு செய்த தென்னாபிரிக்கா அணி, தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலைப் பெற்றுள்ளது.

## மெல்பர்ன் மைதானத்தில்
# 2ஆவது முறையாக ரஹானேயின் பெயர்

100 ஆண்டுகள் பழமையான பாரம்பரியம் கொண்ட மெல்பர்ன் மைதானத்தில் இந்திய அணியின் தலைவர் ரஹானேயின் பெயர், 2ஆவது முறையாக பெருமைக்குரியவர்கள் பட்டியலில் பொறிக்கப்பட்டுள்ளது.

அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 2ஆவது இன்னிங்ஸில் 36 ஓட்டங்களில் சுருண்டு மோசமான தோல்வியை ஆஸ்திரேலியாவிடம் சந்தித்தது. ஆனால், மெல்பர்னில் நடந்த பொக்ஸிங் டே டெஸ்ட் போட்டியில் முந்தைய தோல்வி எதையும் கருத்தில் கொள்ளாமல், ஆடிய இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியைத் தோற்கடித்துப் பதிலடி கொடுத்தது.

தலைவர் கோலி இல்லாத நிலையில், இடைக்கால தலைவராக செயல்பட்ட ரஹானே சதம் அடித்து வெற்றிக்கு முக்கியக் காரணமாக அமைந்தார். ஆட்டநாயகன் விருதையும் பெற்றார். மெல்பர்ன் மைதானத்தில் ரஹானே அடிக்கும் இரண்டாவது சதம் இதுவாகும். இதற்கு முன் கடந்த 2014ஆம் ஆண்டில் ஆஸி. பயணம் சென்றபோது ரஹானே 147 ஓட்டங்கள் சேர்த்திருந்தார்.

இதுவரை ரஹானே இந்திய அணிக்கு 3 டெஸ்ட் போட்டிகளில் தலைமை ஏற்று நடத்திச் சென்று அனைத்திலும் வெற்றியைப் பெற்றுக் கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியர்கள் முகத்தில் புன்னகை; அதுவே எனது மிகப்பெரிய விருது

இந்தியர்கள் முகத்தில் புன்னகையை ஏற்படுத்தியதுதான் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய வெகுமதி, விருதாக நினைக்கிறேன் என்று இந்திய அணியின் தலைவர் ரஹானே ருவிட்டரில் உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.


அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 2ஆவது இன்னிங்ஸில் 36 ஓட்டங்களில் சுருண்டு மோசமான தோல்வியை அவுஸ்திரேலியாவிடம் சந்தித்தது. இந்திய அணி டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றிலேயே மிக மோசமாக 36 ஓட்டங்களில் சுருண்டது.

இது கிரிக்கெட் ரசிகர்கள் மனதில் தீராத வலியை ஏற்படுத்தியது. ரசிகர்கள் தங்கள் வருத்தத்தையும், வேதனையையும், கோபத்தையும் சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தி வந்தனர்.

அதுமட்டுமல்லாமல், இந்திய அணி டெஸ்ட் தொடரில் 4-0 என்று தோல்வியுற்றுச் செல்லும் என சர்வதேச முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலரும் கிண்டல் செய்தார்கள். விடுப்பு எடுத்துச் சென்றுள்ள கோலியை மீண்டும் அழைக்கலாம் என்ற பேச்சும் எழுந்தது.

பந்துவீச்சில் முகமது ஷமி இல்லை, கோலி இல்லை, இசாந்த் சர்மா கிடையாது. இதுபோன்ற பலவீனமான அணி எவ்வாறு பொக்ஸிங் டே டெஸ்ட் போட்டியில் வெல்லப்போகிறது என்ற கேள்வி எழுந்தது.

ஆனால், ரஹானேவின் அருமையான அணித்தலைமையால்பொக்ஸிங்டே டெஸ்ட்போட்டியில் முதல் இன்னிங்ஸில் ஆஸி. அணியை 195 ஓட்டங்களில் இந்தியப் பந்துவீச்சாளர்கள் சுருட்டினர். ரஹானேவின் அற்புதமான சதம் (112), ஜடேஜாவின் அரை சதம் ஆகியவற்றால், 326 ஓட்டங்களை



இந்திய அணி முதல் இன்னிங்ஸில் குவித்தது.

2ஆவது இன்னிங்ஸில் இந்திய வீரர்களின் மிரட்டல் பந்து வீச்சில் 200 ஓட்டங்களில் ஆஸி. ஆட்டமிழந்தது. 70 ஓட்டங்கள் எனும் எளிய இலக்கை 2 விக்கெட்டுகளை இழந்து எட்டி இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. இதன் மூலம் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-1 என்ற கணக்கில் இரு அணிகளும் சமநிலையில் இருக்கின்றன.

நேர்த்தியான களத்தடுப்பு அமைப்பு, எதிரணியைக் குழப்பும் வகையில் பந்துவீச்சாளர்களை மாற்றிப் பயன்படுத்தியது என சாதுர்யமாகச் செயல்பட்ட ரஹானேயின் தலைமை அனைவராலும் பாராட்டப்பட்டது. இந்தப் போட்டியில் ஆட்டநாயகன் விருதையும் ரஹானே பெற்றார்.

இந்நிலையில் தங்களுக்கு ஆதரவு அளித்த இந்திய கிரிக்கெட் ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்து ரஹானே டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அதில், "நாங்கள் பெற்றுக் கொண்ட ரசிகர்களின் அனைத்து அன்புக்கும், ஆதரவுக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். ஒரு அணியாக எங்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெகுமதி, விருது என்பது, இந்திய கிரிக்கெட் ரசிகர்களின் முகத்தில் புன்னகையைக் கொண்டு வந்ததுதான். தொடர்ந்து உங்களின் ஆதரவையும், வாழ்த்துகளையும் தெரிவிக்க வேண்டும். அடுத்த இரு போட்டிகளிலும் நாங்கள் கடினமாக உழைக்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

ஆட்டநாயகன் விருதைப் பெற்றுக்கொண்டு ரஹானே அளித்த பேட்டியில், "வீரர்கள் அனைவரையும் நினைத்துப் பெருமைப்படுகிறேன். சிறப்பாக விளையாடினார்கள். அறிமுக வீரர்கள் சிராஜ், கில் இருவருக்கும்தான் ஆட்டநாயகன் விருது அளிக்கப்படவேண்டும்.

ஆட்டநாயகன் விருதுக்கு நான் பொருத்தமானவர் அல்ல. அடிலெய்ட் தோல்விக்குப்பின், அதை வெளிக்காட்டாமல் வீரர்கள் தங்களுடைய குணத்தை வெளிப்படுத்தி விளையாடியதைப் பார்க்கவே பெருமையாக இருந்தது" எனத் தெரிவித்தார்.

# யுத்த காலத்தில் அடையாள அட்டை இப்போது முகக்கவசம் மிக அவசியம்



மட்டக்களப்பு,ஜன.01

யுத்த காலத்தில் எமக்கு தேசிய அடையாள அட்டை எவ்வளவு முக்கியமாக இருந்ததோ அதைவிட, முக்கியமானது தற்பொழுது முகக்கவசம் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அ.லதாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: மக்கள் வெளியில் செல்லும் போது முகக் கவசங்களை உரிய முறையில் அணிந்து செல்ல வேண்டும்.

ஏனெனில், பலர் தங்களது தாடையின் கீழ் முகக்கவசத்தை அணிந்து செல்வதை காணக் கூடியதாக இருக்கின்றது. உடம்பில் இருக்கின்ற மூன்று பகுதிகள் கொரோனா கிருமி நுழையக்கூடிய பகுதிகளாக இருக்கின்றன. ஒன்று கண், இரண்டாவது மூக்கு, மூன்றாவது வாய். ஆகவே நாங்கள் முகக்கவசத்தை சரியான முறையில் அணிய வேண்டும்.

தனிநபர் இடைவெளியை நாங்கள் கடைப்பிடிக்க வேண்டும். இரண்டு நபர்கள் பேசும் போது, கண்டிப்பாக சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆகவே, மக்கள் தங்களது குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்புக் கருதி சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்- என்றார். (எ)

# வங்கிகளின் வைப்பு இழப்பு பாரிய பொருளாதார வீழ்ச்சி

## கரு ஜயசூரிய எச்சரிக்கை



கொழும்பு,ஜன.01

வங்கிகளின் வைப்பு இழப்புக்கள் மற்றும் அவற்றின்மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையில் வீழ்ச்சி என்பன எதிர்வரவுள்ள நெருக்கடியை முன்னறிவிப்பதாக அமைந்துள்ளது. எனவே தற்போது வங்கிகளை விவேகத்துடன் நிர்வகிப்பதிலிருந்து தவறும் பட்சத்தில் மிகக்கடுமையான பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொள்ள நேரிடும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பில் நேற்று அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வங்கியின் வைப்பு இழப்புக்கள் மற்றும் மோசமடைந்துள்ள நம்பகத்தன்மை என்பன வங்கி எதிர்வரவுள்ள நெருக்கடியை முன்னறிவிப்பதாக அமைந்துள்ளது. பொதுமக்கள் தமது சிறியளவிலான சேமிப்பையே வங்கிகளில் முதலீடு செய்துள்ளனர். ஆகவே, தற்போது வங்கிகளை விவேகத்துடன் நிர்வகிப்பதிலிருந்து தவறும் பட்சத்தில், அதிகரித்த வைப்பு இழப்புக்கள் மற்றும் முறைசாரா நிதி நடவடிக்கைகள் என்பவற்றுடனான மிகக்கடுமையான பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொள்ள நேரிடும்.

அதேபோன்று கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட சில முற்பாதுகாப்பு நடவடிக்கைகளின் விளைவாக பொருளாதார செயல்திறன் மந்தமடைந்திருப்பதுடன் உணவுப் பொருள்களின் விலைகள் பெருமளவுக்கு அதிகரித்திருக்கின்றன. இவற்றினால் சிறுவர்களும்,வயோதிபர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். - எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

# உடல் அடக்கத்துக்கு அனுமதி கோருவது முஸ்லிம்களுக்கான கோரிக்கை மட்டுமல்ல

## நீதி அமைச்சர் அலி சப்ரி விளக்கம்



கொழும்பு,ஜன.01

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதால் அதன் மூலம் வைரஸ் பரவுவதை விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தினால் தகனம் செய்ய வேண்டும் என தெரிவிப்பவர்களின் நிலைப்பாட்டிலேயே நானும் இருப்பேன். ஆனால், தகனம் செய்யவேண்டும் எனத் தெரிவிப்பவர்களின் கருத்தில் எந்தவித விஞ்ஞான அடிப்படையும் இல்லை. அவர்கள் எடுத்த தீர்மானத்தை கைவிட முடியாத பிரச்னையாகவே இருக்கின்றது என நீதி அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் இளைஞர்கள் அடிப்படைவாதத்துக்குத் தள்ளப்படுவார்கள் என தான் தெரிவித்த கருத்து தொடர்பில் எழுந்திருக்கும் விமர்சனம் தொடர்பில் அவர் இவ்வாறு விளக்கமளித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எந்தவொரு பிரச்னையும் பேச்சுக்கள் மூலம் தீர்த்துக் கொள்ள முடியாமல் போவதையே அடிப்படைவாதிகள் எதிர்பார்க்கின்றனர். எந்தவொரு சமூகத்துக்கும் எதிராக அநீதி ஏற்படும்போது அதனை அடிப்படைவாதிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்ற கருத்திலே கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதியிருந்தும் எமது நாட்டில் அது மறுக்கப்படும் போது அதனால் பாதிக்கப்படுபவர்கள் அடிப்படைவாதிகளின் கைகளுக்குள் இலகுவில் சிக்கிக்கொள்வார்கள் எனத் தெரிவித்திருந்தேன். அதனை சில ஊடகங்கள் திரிபுபடுத்தி தெரிவித்திருக்கின்றன.

அத்துடன், கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதிக்கவேண்டும் என்பது முஸ்லிம் மக்களுக்கு மாத்திரமான கோரிக்கையல்ல. உலகில் 195 நாடுகளில் தகனம் செய்யவும் அடக்கம் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனமும் அதனை அனுமதித்திருக்கின்றது. அதனடிப்படையிலேயே எந்த நிபந்தனையிலாவது அடக்கம் செய்ய கோருபவர்களுக்கு அதற்கான அனுமதியை வழங்கவேண்டும் என்பதே எமது கோரிக்கை. அது முஸ்லிம்களுக்கு மாத்திரம் வழங்கவேண்டும் என யாரும் தெரிவிக்கவில்லை.

நாங்கள் உலகில் இல்லாத ஒன்றை கேட்கவில்லை. தகனம் செய்வதற்கு பதிலாக அடக்கம் செய்யவே அனுமதி கேட்கின்றோம். அதற்கு உலக சுகாதார ஸ்தாபனமும் அனுமதி வழங்கியிருப்பதாலே கேட்கின்றோம். அத்துடன் தகனம் செய்ய வேண்டும் எனத் தெரிவித்து தீர்மானம் எடுத்தவர்களுக்கு அதனைக் கைவிட முடியாத நிலையிலேயே அதில் பிடிவாதமாக இருக்கின்றனர்- என்றார்.

# 1000 தேசிய பாடசாலைகள் அமைக்கும் திட்டம் ஆரம்பம்



கொழும்பு,ஜன.01

நாட்டில் சகல வசதிகளுடன் கூடிய ஆயிரம் தேசிய பாடசாலைகளை அமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப வைபவம் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் கோட்டை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த வேலைத்திட்டத்தின் முதல் பாடசாலையாக சுமார் 200 வருடங்கள் பழைமை வாய்ந்த இந்தக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு முழுமையான கல்வியை வழங்கும் விடயத்தில் கணனி தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், மொழிக்கல்வி உள்ளிட்ட வசதிகள் விருத்தி செய்யப்பட வேண்டும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் அமைக்கப்படும் புதிய தேசிய பாடசாலைகள் இந்த அனைத்து வசதிகளையும் வழங்கும் என அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ், ஆயிரம் தேசிய பாடசாலைகளை அமைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பல கட்டங்களாக இந்தச் செயல்திட்டம் முன்னெடுக்கப்படும்.

முதல் கட்டத்தில் 123 பாடசாலைகளும், இரண்டாம் கட்டத்தில் 673 பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்படும்- என்றார். (எ)

# “ரஜினி அரசியலை கைவிட்டதால் தப்பிப்பிழைத்தது தமிழ்நாடு”

## மனோ கணேசன் கூறுகிறார்



கொழும்பு,ஜன.01

நடிகர் ரஜினிகாந்த், அரசியல் கட்சி தொடங்க மாட்டேன் என்று அறிவித்ததால் தமிழ்நாடு தப்பிப்பிழைத்துள்ளது என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவளி குடும்பத்தைச் சேர்ந்த மனோ கணேசன், இலங்கையில் பிறந்தவர் என்ற போதும் தமிழ்நாடு தொடர்பான தகவல்களை மிகவும் உன்னிப்பாக கவனித்து வருபவர். சமூக ஊடகங்களில் மனதில் பட்டதை பதிவிடும் வழக்கத்தைக் கொண்டிருக்கும் மனோ கணேசன், ரஜினியின் அரசியல் கைவிடல் அறிவிப்புக்கு பிறகு தனது பேஸ்புக் பக்கத்தில் நீண்ட கட்டுரையை எழுதியிருக்கிறார். அதிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரம் விமர்சனங்கள் இருந்தாலும், தமிழ்நாடு பல வட இந்திய மாநிலங்களை விட முன்னேறிய ஒரு மாநிலம்.

தமிழ்நாட்டின் “ஒப்பீட்டளவிலான முன்னேறிய” நிலைமைக்கு காரணம் இம்மாநிலத்தையும், புதுச்சேரியையும் தேசிய கட்சிகள் அல்லாமல், “திராவிட” கட்சிகள் பல பத்தாண்டுகளாக ஆண்டு வருவதே காரணம்.

திராவிட இயக்க அணியின் மூலக்கொள்கை ‘சமூக நீதி’ என்பதாகும். இந்நீதி, நீதிக்கட்சியிலிருந்து ஆரம்பமாகி பெரியார், அண்ணா ஆகிய பெருந்தலைவர்களால் செதுக்கப்பட்டதாகும். இதுதான் தமிழ் நாட்டின் முன்னேற்றத்துக்கு அடிநாதமாக விளங்குகிறது.

(1)“ரஜினி ஒரு சினிமா நடிகர்” என்பதோ அல்லது “அவர் பிறப்பால் ஒரு தமிழர் அல்ல” என்பதோ எனது கருத்துக்களுக்கு காரணம் அல்ல என்பது சிலருக்கு புரியவில்லை.

(2)‘சமூக நீதி’ என்று நான் எதைச் சொல்கின்றேன் என சிலருக்கு முழுமையாகப் புரியவில்லை. சிலருக்குப் பாதிதான் புரிகிறது.

தனிப்பட்ட வாழ்வில் ஆன்மீகம் என்பதற்கும், பெரியாரின் திருமணத்துக்கும் நான் முக்கியத்துவங்கள் தரவில்லை.

இவை அவரவர் தனிப்பட்ட வாழ்வுகள். இவற்றையெல்லாம் வைத்து பேசப்போனால் ஒருவரும் மிஞ்ச மாட்டார்கள்.

ஆன்மீகத்தை அரசியலுக்கு ஓர் அடையாளமாகப் பயன்படுத்த விளைந்தமையே சிக்கலை ஏற்படுத்தியது.

காமராஜர் ஒரு விதிவிலக்கு. அவரது மகிமையின் பெயர் மகா எளிமை.

அவருக்கு பின் இன்னொருவரை அப்படி காட்டுங்கள் பார்க்கலாம். முடியாது. ஆகவே, அவர் பெயரை சொல்லி, தமிழகத்தில் தேசிய கட்சிகள் ஆட்சியுரிமை கோர முடியாது. அப்படி கோருவது கொடுமை.

ஆன்மீகவாதிகளாக, பட்டினத்தார் முதல் கைலாஷா நித்தியானந்தா வரை அநேகர் இருந்திருக்கிறார்கள்.

இந்த ஆன்மீகத்தை அரசியல் ஆட்சியுரிமையை பெறுவதற்கான தகைமையாக காட்டுவதில்தான் சிக்கல்.

வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்கூட ஆன்மீகவாதிதான். ஆனால், அவர் அதை, ஆட்சியுரிமைக்கான தனது விசேட தகைமையாக காட்டிக் கொண்டதாக எனக்கு ஞாபகமில்லை.

அப்படிப் பார்த்தால் முதலிடத்தில் இருப்பவர், தமிழகத்தில் பிறந்த சுவாமி நித்தியானந்தாதான் என மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். (எ)

# நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடக்கு அலுவலக அதிகாரி கைது!

கிளிநொச்சி, ஜன.01

**நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடக்கு மாகாண பிராந்திய அலுவலக அதிகாரி ஒருவர் குற்ற புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

கிளிநொச்சி கரடிபோக்குச் சந்தியில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடக்கு மாகாண பிராந்திய அலுவலகத்தில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்ட ரீதியில் அறுவடை செய்யப்படும் நெல்லை அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரிசி ஆலைகளுக்கு வழங்கி அரிசியாக சதோச உள்ளிட்ட நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் நடைமுறை காணப்படும் நிலையில் கிலோ ஒன்றுக்கு 3 ரூபா பணத்தை தரகர் கூலியாக பெற்று (லஞ்சமாக) வெளி மாவட்ட அரிசி ஆலைகளுக்கு விற்பனை செய்வதாக அமைச்சருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்யுமாறு அமைச்சரினால் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் நேற்று விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது மேலதிகமாக பெருந்தொகைப் பணம் காணப்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த சம்பவம் தொடர்பாக கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட குற்ற புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மா அரைக்கும் இயந்திரத்தில் கூந்தல் சிக்கி பெண் மரணம்!

கொழும்பு, ஜன.01

வெலிகந்தை பிரதேசத்தில் மா அரைக்கும் இயந்திரத்தில் மா அரைப்பதில் ஈடுபட்ட பெண் ஒருவரின் கூந்தல் சிக்கி கொண்டதில் பெண் ஒருவர் உயிரிழந்த சம்பம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக வெலிகந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிகந்தை மஹிந்தாகம கடவத்தமடு பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய சந்திரிகதக என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சுயதொழிலுக்காக பொருத்தப்பட்ட மாவரைக்கும் இயந்திரத்தில் இந்தப் பெண் வழமைபோல சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை மா அரைப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவரது கூந்தல் இயந்திரத்தில் சிக்கியதால் அவர் பலமாக சுற்றப்பட்டு சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக வெலிகந்தை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாராளுமன்ற அதிகாரிகள் 25 பேருக்கு நேற்று பி.சி.ஆர்.

கொழும்பு, ஜன.01

பாராளுமன்றத்தின் சபாநாயகர் அலுவலகம், தபால் அலுவலகம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் போன்றவற்றில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பாராளுமன்றத்தின் படைக்கள சேவிதர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

சபாநாயகரின் பாதுகாப்புப் பிரிவில் உள்ள பொலிஸ் சாரதி மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் என இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான பொலிஸ் அதிகாரிகள் சபாநாயகரின் அலுவலகம், தபால் அலுவலகம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் போன்றவற்றுக்குச் சென்றுள்ளமை சி.சி.ரி.வி. காட்சிகளின் ஊடாகத் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக குறித்த பொலிஸ் அதிகாரிகள் தொடர்புபட்ட 25 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற ஊழியர்களுக்கு இன்று பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாபெரும் கூட்டணி அறிவிப்பு வெகுவிரைவில் வெளியாகும்

### மனோ கணேசன் கூறுகிறார்

கொழும்பு, ஜன 01

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான மாபெரும் கூட்டணி ஒன்று குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என முன்னாள் அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.



புதிய கூட்டணி அமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது உருவாக்கப்பட்டு வரும் இந்த கூட்டணியில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் இணைய உள்ளன.

இதற்காக உருவாக்கப்படுகின்ற தலைமைத்துவ சபையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தவிசாளராக தெரிவு செய்யப்படுவார் என்றும் மனோ கணேசன் கூறினார்.

## பெற்றோலிய கூட்டுத்தாபன தலைமை அலுவலகம் பூட்டு

கொழும்பு, ஜன 01

தெமட்டகொடவில் உள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் முத்துராஜாவெல மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளன.

முத்துராஜாவெல மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பணியாற்றிய ஊழியர் ஒருவர், பி.சி.ஆர் சோதனையின் முடிவுகள் வெளிவருவதற்கு முன்பே, அவர் தலைமை அலுவலகத்திற்கு வந்தார் எனக் கூறப்படுகிறது. அவர் தலைமை அலுவலகத்தின் பல பிரிவுகளை பார்வையிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்த ஊழியர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட பின்னர் இரு நிறுவனங்களும் மூடப்பட்டன.

## 35,329 பேர் குணமடைவு

கொழும்பு, ஜன 01

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 706 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்கள். இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 329 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 7 ஆயிரத்து 174 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் 199 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 4 ஆயிரத்தைக் கடந்தது சிறைச்சாலை கொத்தணி

கொழும்பு, ஜன.01

சிறைச்சாலைகளில் கொரோனா வைரஸிக்கு இலக்காகிய புதிய 67 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஆண் கைதிகள் என்று சிறைச்சாலை தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தொற்றாளர்களுடன் சேர்த்து இதுவரை சிறைச்சாலைகளுக்குள் அடையாளம் காணப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து16 ஆக உயர்வடைந்துள்ளது.

இவர்களில் 3 ஆயிரத்து 272 பேர் பூரண குணமடைந்துள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




**காலை**

5.15 மணி - தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி - தரம் 07 - கணிதம்
6.45 மணி - தரம் 08 - தமிழ்
7.30 மணி - தரம் 09 - கணிதம்
8.15 மணி - தரம் 10 - தமிழ்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி - க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**

12.00 மணி - தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி - தரம் 09 - கணிதம்
2.00 மணி - தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் தமிழ்
7.00 மணி - க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள்

## காலத்தை கடத்தவே ஆயிரம் ரூபா விடயத்தில் ஒத்திவைப்பு நாடகம்

### திகாம்பரம் சீற்றம்

கொழும்பு, ஜன 01

"பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2021 ஜனவரி முதலாம் திகதி முதல் சம்பள உயர்வு வழங்கப்படும் என அரசாங்கத்தாலும் , அரச சார்பு தொழிற்சங்கங்களாலும் அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும் சம்பள உயர்வுக்கு சாத்தியமில்லை என்பது தற்போது உறுதியாகியுள்ளதுடன், இது விடயத்தில் இழுபறி நிலை தொடர்கின்றது." என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஜனவரி முதலாம் திகதி முதல் சம்பள உயர்வு கிடைக்கவேண்டுமெனில் இந்நேரம் பேச்சுவார்த்தை முடிவுக்கு கொண்டுவரப்பட்டு தீர்மானம் எட்டப்பட்டிருக்கவேண்டும்.ஆனால் சம்பள உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தை மீண்டும் திட்டமிட்ட அடிப்படையில் பிற்போடப்பட்டு வருகின்றது.

ஜனவரி 7 ஆம் திகதிதான் பேச்சு நடத்தப்படும் என அறிவிப்பு விடுக்கப்பட்டாலும் எப்போது இறுதி முடிவு எட்டப்படும் என்பது பற்றி உறுதியான தகவல் எதுவும் இல்லை. சிலவேளை இதன் பின்னணியில் இழுத்தடிப்பு என்ற நாடகம்கூட அரங்கேறலாம். பேச்சுவார்த்தை நடக்கின்றது என்ற போர்வையில் காலம் கடத்தப்படலாம்.

குறிப்பாக வரவு - செலவுத் திட்டத்தில் ஆயிரம் ரூபா தொடர்பான முன்மொழிவு இருந்தாலும் அதற்கான நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை. கம்பனிகள் நினைத்தால் மட்டுமே சம்பளம் கிடைக்கும் என்ற நிலைமை காணப்படுகின்றது. பேரம் பேசி, தீர்வை பெறுவதற்கு கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் உரிய அக்கறை செலுத்தவில்லை.



எது எப்படியிருந்தாலும் எமதுமக்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா அவசியம், ஜனவரியில் தீர்வு எட்டப்படாவிட்டால்கூட, ஜனவரி முதலாம்திகதி முதல்சம்பளம் கணிக்கப்பட்டு நிலுவைக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவேண்டும்-என்றார்.

ஈழநாடு
Eelanadu

# மஹர சிறைச்சாலை கலவரம்; விமல், ஜயந்தவிடம் விசாரணை





**கொழும்பு, ஜன.01**

**மஹர சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் குறித்து அமைச்சர் விமல் வீரவன்ஸ மற்றும் இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீரவிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளும்படி வத்தளை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

மஹர சிறை கலவரம் குறித்த வழக்கு விசாரணை வத்தளை நீதவான் நீதிமன்றில் நேற்று முன் தினம் நடந்தது. இந்தக் கலவரம் குறித்து பாராளுமன்றத்திலும், பொது இடங்களிலும் மேற்படி இரண்டு அமைச்சர்களும் பகிரங்கத் தகவல்களை வெளியிட்டிருந்தனர்.

குறிப்பாக கைதிகள் ரிவர்ஸ் என்கின்ற இரத்தத்தை காணும் படிக்கு வெறித்தனம் ஏற்படுகின்ற மாத்திரைகளை உட்கொண்டபடியினால்தான் கலவரத்தில் ஈடுபட்டனர் என்று அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இந்தக் கருத்து தொடர்பாக நேற்று முன்தினம் நடந்த வழக்கு விசாரணையின் போது பாதிக்கப்பட்ட தரப்பிலிருந்து, குறித்த இருவரிடமும் விசாரணை நடத்தும் படியான கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் அமைச்சர் விமல் வீரவன்ஸ மற்றும் இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர ஆகியோரிடம் விரைவில் வாக்குமூலத் தைப் பதிவுசெய்து அதனை அறிக்கையாக எதிர் வரும் 8ஆம் திகதி சமர்ப்பிக்கும்படி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கொண்டாட்டங்களுக்காக ஒன்றுகூடுவதை தவிருங்கள்

### பொலிஸார், சுகாதாரப் பிரிவினர் வேண்டுகோள்

*கொழும்பு, ஜன.01*

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் புது வருடத்தை வரவேற்கத் தயாராகின்ற நிலையில், பொதுமக்கள் ஒன்றுகூடும் வைபவங்கள் மற்றும் களியாட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்று அதிகரித்துவரும் நிலையில், தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தல் மற்றும் விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளும் நோக்கில் சுகாதாரப் பிரிவு மற்றும் பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்.

பட்டாசு கொளுத்துதல், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துதல், நீர் நிலைகளில் ஏற்படும் விபத்துக்கள் போன்றன அதிகரிக்கலாம் என்று சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு, பண்டிகைக் காலத்தில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் சிறுவர்கள் விடயத்தில் மிகுந்த கவனம் செலுத்துமாறு அனர்த்த முகாமைத்துவப் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, பொதுப் போக்குவரத்துச் சேவையைக் கண்காணிப்பதற்காக சிவில் உடையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித் துள்ளார்.

இந்தநிலையில், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுபவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

66 ஆவது
பிறந்த தின வாழ்த்து
கல்விக் காருண்யன்
ஈ.எஸ்.பி. நாகரத்தினம்
66 ஆவது அகவையில் காலடி பதிக்கும் பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளருமான ஈ.எஸ்பி. நாகரத்தினம் அவர்கள் நீடூழி காலம் வாழ் வாழ்த்துகின்றோம்.
யாழ். கல்விச் சமூகம்.



அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 16646 \| வே \|1982<br>குடத்தனை \| இந்து<br>Staff\| France\|<br>அஸ்வினி(மேடம்)\|178செ.மீ | 15775\| வ \|1990<br>மூதூர்\| இந்து<br>Lawyer \| Sri lanka \|<br>கேட்டை(விருச்சிகம்) \|152செ.மீ |
| 16541 \|வே \|1982<br>சண்டிலிப்பாய்\| இந்து<br>Practice Manager \|Australia<br>\|கார்த்திகை(ரிஷபம்)\| 173செ.மீ | 15751 \| வே \|1990<br>சண்டிலிப்பாய்\| இந்து<br>Teacher\| Sri lanka\| செவ் :08<br>சதயம்(கும்பம்)\|164செ.மீ |
| 16349\| கு\|1983<br>திருக்கடலூர்\|இந்து\|லக்.சூ.செவ்<br>It Technician \| Bahrain \|<br>மிருகசீரிடம் (மிதுனம்) \|184செ.மீ | 16195\| வே \|1990<br>திருநெல்வேலி\| இந்து<br>Lecturer\| Sri lanka \|<br>ரேவதி(மீனம்) \|152செ.மீ |
| 16319 \|கு \|1983<br>வல்வெட்டித்துறை\| இந்து<br>Business Development Manager\| Sri lanka \|செவ் : 02<br>ரேவதி(மீனம்) \|176செ.மீ | 15745\| வே \|1990<br>கந்தர்மடம்\| இந்து<br>Project Engineer\| Singapore<br>அஸ்வினி(மேடம்)\|155செ.மீ |
| 16979\| வே \|1983<br>அளவெட்டி\| இந்து \| செவ் : 08<br>Electrical work &Farmer\|<br>Sri lanka\|கேட்டை(விருச்சிகம்)<br>\|168செ.மீ | 16334 \| வே \|1990<br>அளவெட்டி \| இந்து<br>Development Officer\|<br>Sri lanka\|ரோகணி(ரிக்ஷபம்) \|<br>153செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com



# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : அவன்தான் இறைவன்,பரதம்



6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்- DOCTOR JOHN
11.00 மணி : TOP 10 MOVIE-: 2020 வெளிவந்த சிறந்த திரைப்படங்களின் தரவரிசை

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : ராமரின் நகைசுவை நிகழ்ச்சி



1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-நேர்கொண்ட பார்வை, பிகில் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-நேரலை
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10
- புது வருட சிறப்பு



**இரவு**
7.00 மணி : Tiktok
7.30 மணி : பத்துக்கு பத்து
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்
- புதுவருட சிறப்பு



10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**இரவு**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மியூசிக்கல் க்ஷோ
10.00 மணி : நேரலை

**பகல்**
12.00 மணி : நேரலை
1.00 மணி : நேரலை
3.00 மணி : நேரலை
4.00 மணி : நேரலை
5.00 மணி : நேரலை
6.00 மணி : நேரலை

**இரவு**
7.00 மணி : நேரலை
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்

**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் கரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் மணலியம்பதி அம்மன் ஐயனார் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் கரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் கோவில் திருவிழா

**காலை**
7.00 மணி : பாடல்கள்
8.30 மணி : கிறிஸ்துமஸ் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : கரோல் கீதங்கள்
11.00 மணி : சில்லாலை கதிரைமாதா ஆலய ஆவணம்

**பகல்**
12.00 மணி : பாடல்கள்
1.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
2.30 மணி : நசரேத்துார் மரியா திரைப்படம்
4.30 மணி : பாடல்
5.00 மணி : ஒளி பிறக்குது (நாடகம்)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : இஸ்லாமிய உலகம் (மறு ஒளிபரப்பு)
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.